Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

பொதுசன நூலகம்

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM.NET
T.P: 021-222 7310, 021-222 7555, 021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
46, ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச. முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 19 (08.06.2004) செவ்வாய்க்கிழமை இதழ் :250

# முக்கிய பிரச்சினைகள் குறித்து ஆராய
# ஆளும் கூட்டணியிலுள்ள கட்சிகளை
# ஜனாதிபதி இன்று சந்திக்கவுள்ளார்!

(கொழும்பு)

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் எதிர்காலச் செயற்பாடுகளை நாடாளுமன்றில் செயற்படுத்தும்விதம் மற்றும் சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பாக எழுந்துள்ள சிக்கல்கள் குறித்தும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம்வகிக்கும் ஆறுகட்சிகளின் உறுப்பினர்கள் அடங்கும் நடவடிக்கைக் குழுவின் விசேட கலந்துரையாடல் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளது.**

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடல் ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவுள்ளது.

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து நோர்வேப் பிரதிநிதிகளூடாக பரிமாறப்பட்ட கருத்துக்கள், மற்றும் ஆலோசனைகள் குறித்து ஜனாதிபதி ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுக்கு தெரியப்படுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதில் சிக்கலாகவுள்ள இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விடுதலைப் புலிகளின் ஆலோசனைகள் குறித்து இன்றைய கலந்துரையாடலில் கவனத்திலெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரும் இன்றைய கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளனர்.

ஐக்கிய முன்னணி அரசு நாடாளுமன்றில் தற்போது எதிர்நோக்கவுள்ள சிக்கல்கள் மற்றும் அரசின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் இன்றைய கலந்துரையாடலில் கவனத்தில் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## எதிர்க்கட்சித் தலைவர் ரணிலுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலை குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

நேற்று மாலை நாடாளுமன்ற கட்டடத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு மேற்கொண்டுள்ள சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் - சமாதான முயற்சியில் சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி கட்சிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் நிலை குறித்தும் பேசப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இன்று நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகள் குறித்தும் கலந்துரையாடலில் பேசப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக் கட்சி இனப் பிரச்சினை தீர்வில் விடுதலைப

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இன அமைதியை குலைத்ததாக மூதூர் நீதிவான் இடைநிறுத்தம்

(திருகோணமலை)

இனங்களுக்கிடையில் அமைதியின்மையை தோற்றுவித்து நீதித்துறைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியதற்கான குற்றச்சாட்டில் -

மூதூர் நீதிமன்ற நீதிவான் ஏ.எல்.ஏ.கபூரை சேவையிலிருந்து இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், இந்த இடைநிறுத்த உத்தரவை செயற்படுத்துவதற்கு நீதிச்சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தச் சேவை இடைநிறுத்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டதாக, நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரா ஜெயதிலக தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தல் சமயத்தில் இவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு சார்பாக நடந்து கொண்டவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் தமது பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தி

## நிரந்தர சமாதானத்தை நோக்கிய பாதையில் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது

### ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தொடரும் கோர யுத்தத்திற்கு முடிவு கட்டி நிலையான உறுதியான சமாதானத்தை நிலைநாட்டுகின்ற முயற்சியில் நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் அர்ப்பணிப்புடன் இணையவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போர்க்களத்தில் உயிர்நீத்த இராணுவத்தினரைக் கௌரவிக்கும் ஞாபகார்த்த நிகழ்வில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கால அரசியல் நோக்கங்களை ஒரு புறம் வைத்துவிட்டு சமாதான முயற்சியினை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு நல்கும் கடப்பாடு அவர்களுக்கு இருக்கின்றது.

போர் தற்காலிகமாக ஓய்ந்திருக்கின்றது. யுத்தநிறுத்தத்தில் இருதரப்பும் அர்ப்பணிப்புடன் இருந்தாலும் நிலையான சமாதானத்தை நோக்கிச் செல்லும் பாதையில் பல சிக்கல்களையும் தடைகளையும் சந்திக்க வேண்டியுள்ளது.

கடந்த இருபது ஆண்டுகாலமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

## முரளியைக் கௌரவித்து

(திருகோணமலை)

இனங்களுக்கிடையில் அமைதியின்மையை தோற்றுவித்து நீதித்துறைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியதற்கான குற்றச்சாட்டில் -

மூதூர் நீதிமன்ற நீதிவான் ஏ.எல்.ஏ.கபூரை சேவையிலிருந்து இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், இந்த இடைநிறுத்த உத்தரவை செயற்படுத்துவதற்கு நீதிச்சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தச் சேவை இடைநிறுத்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டதாக, நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சந்திரா ஜெயதிலக தெரிவித்தார்.

கடந்த பொதுத்தேர்தல் சமயத்தில் இவர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு சார்பாக நடந்து கொண்டவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் தமது பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களை முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியதாகவும், இன ஐக்கியத்துக்கு பங்கம் விளைவிக்கும்படி நடந்து கொண்டதாகவும், தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களுக்கு சார்பாக செயற்பட்டார் எனவும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மேலாக தொடரும் கோர யுத்தத்திற்கு முடிவு கட்டி நிலையான உறுதியான சமாதானத்தை நிலைநாட்டுகின்ற முயற்சியில் நாட்டின் அனைத்து அரசியல் கட்சிகளும் அர்ப்பணிப்புடன் இணையவேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போர்க்களத்தில் உயிர்நீத்த இராணுவத்தினரைக் கௌரவிக்கும் ஞாபகார்த்த நிகழ்வில் கலந்து கொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கண்டியில் நடந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆட்சிபீடத்தில் உள்ளது எந்தக்கட்சியாயினும் தமது குறுகிய

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

கால அரசியல் நோக்கங்களை ஒருபுறம் வைத்துவிட்டு சமாதான முயற்சியினை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு நல்கும் கடப்பாடு அவர்களுக்கு இருக்கின்றது.

போர் தற்காலிகமாக ஓய்ந்திருக்கின்றது. யுத்தநிறுத்தத்தில் இருதரப்பும் அர்ப்பணிப்புடன் இருந்தாலும் நிலையான சமாதானத்தை நோக்கிச் செல்லும் பாதையில் பல சிக்கல்களையும் தடைகளையும் சந்திக்க வேண்டியுள்ளது.

கடந்த இருபது ஆண்டுகாலமாக

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முரளியைக் கௌரவித்து வட்ட வடிவில் முத்திரை!



(கொழும்பு)

உலகசதனை படைத்த கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரனைக் கௌரவிக்கும் வகையில் அரசாங்கம் விசேட முத்திரையை வெளியிடவுள்ளது.

இந்தத் தகவலை இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது.

இலங்கையின் சிரேஷ்ட ஓவியக்கலைஞரான றோகனவிக்கிரமசிங்க வடிவமைத்திருக்கும் இந்த முத்திரை வட்டவடிவமானதாகும். இலங்கை வரலாற்றிலேயே

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்கத்தின் நிலைப்பாட்டை கண்டித்து குடாநாட்டில் மாபெரும் கண்டனப் பேரணி!

## வெள்ளியன்று நடத்த ஏற்பாடு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அசமந்தப் போக்கை கண்டித்தும் மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தும் எதிர்வரும வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டத்தில் மாபெரும் கண்டனப் பேரணி இடம்பெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதிலுள்ள தடைகளை நீக்குதல், மீளக்குடியமர்த்தல், கிழக்கில் தமிழர் தேசியப் பற்றாளர்களின் படுகொலை என்பனவற்றில் அரசு மேற்கொண்டுவரும் அசமந்தப் போக்கைக் கண்டித்து இந்தக் கண்டனப் பேரணி இடம்பெறவுள்ளது.

இந்தக் கண்டனப் பேரணி குறித்து பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது -

ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் நழுவல் போக்கினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் இன்று தோல்வியாகியுள்ளன.

பெரும் இழப்புக்களையும் அழிவுகளையும் எதிர்கொண்ட தமிழ் மக்கள் சமாதான வழியில் ஒரு தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு மங்கி வருகிறது.

போர்நிறுத்தம் ஏற்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருபத்தெட்டு மாதங்களாகியும் தமிழர் தாயகத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

மாறாக பேச்சுவார்த்தை இழுத்தடிக்கப்பட்டு மீண்டும் ஒரு போரை தமிழ் மக்கள் மீது திணிக்கும் முயற்சிகள் தொடங்குவது போல் தெரிகிறது.

இதனை தமிழ் மக்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். இதனை யாழ்ப்பாண மாவட்ட பொது அமைபபுக்களின் ஒன்றியம் கடுமையாக எதிர்க்கின்றது.

புதிய அரசை ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அமைத்தபோது போர் நிறுத்தம் புரிந்துணர்வு ஒப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை சமாதான முயற்சிகளுக்கு இந்தியா பூரண ஆதரவு வழங்கும்!

## ஜனாதிபதி அப்துல் கலாம்

கொழும்பு)

இலங்கையில் சகல மக்களதும் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சமாதான முயற்சிகளுக்கு இந்தியாவின் பூரண ஆதரவு இருப்பதாக - இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர், லோக்சபா, ராஜ்ய சபா ஆகியவற்றின் முதலாவது கூட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது -

தெற்காசியாவில் உள்ள அயல் நாடுகளுடன் நெருங்கிய அரசியல் பொருளாதார உறவுகளைக் கட்டியெழுப்ப சார்க் அமைப்பைப் பயன்

(12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...
(சி/2489)

# 122 வருடங்களுக்குப் பின்னர் வானில் அபூர்வ காட்சி தெரியும்!

(யாழ்ப்பாணம்)

சூரியனும், சுக்கிரனும் ஒரே பாகையில் ஒரே நட்சத்திரத்தில் இன்று சஞ்சரிக்கவுள்ளன. இந்த அரிய நிகழ்வு 122 வருடங்களின் பின்னர், இந்த வருடமே நிகழ்கின்றது.

இந்தக் காட்சியை புகையூட்டப்பட்ட கண்ணாடியின் மூலமும், தொலைநோக்கி மூலமும் பார்க்கலாம். இதன்மூலம் பஞ்சாங்கக் கணிப்பு முறைகள் சரியா என ஆராய அரிய சந்தர்ப்பமாகும்.

திருக்கணிதப் பஞ்சாங்கப்படி சூரியன், சுக்கிரன் ஆகிய இரு இடங்களும் இடப ராசியில் மிருக சீரிடம் முதலாம் பாதத்தில் சஞ்சரிப்பதால் இந்தச் சேர்க்கை ஏற்படுகிறது.

ஆனால், வாக்கிய பஞ்சாங்கப்படி இடப ராசியிலும், மிருக சீரிடம் முதலாம் பாதத்தில் சுக்கிரன் மிதுன ராசியில் மிருக சீரிடம் மூன் றாம் பாதத்திலும் சஞ்சரிக்கின்றன. இந்தக் கணிப்பின் பிரகாரம் இரு கிரகங்களிடையே 10 பாகை வித்தியாசம் ஏற்படுகிறது. எனவே வாக்கிய பஞ்சாங்கப்படி இந்தக் கிரக சேர்க்கை ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை.

மேலும் முனிவர்களின் கணிப்பு முறைகளைப் பின்பற்றிக் கணித்து, வெளிவரும் பழைய பஞ்சாங்கக் கணிப்பு முறைகளை காலத்திற்கேற்ப திருத்தங்களைச் செய்து உபயோகிக்காமலேயே இவ்வாறு வழுக்கள் ஏற்பட்டிருக்கின்றன.

# கலந்துரையாடலுக்கு பங்கேற்க பொது அமைப்புக்களுக்கு அழைப்பு

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் மாபெரும் கண்டனப் பேரணியை முன்னிட்டு அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது குறித்து இன்று மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் முக்கிய கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு இலங்கைதமிழர் ஆசிரியர் சங்கம், பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஏனைய கூட்டுறவுச் சங்கம், யாழ்.வணிகர் கழகம் வர்த்தக சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சர்வதேச மாணவர் பேரவை, ஏனைய பொது அமைப்புக்கள் அரச ஊழியர்கள் கல்விச் சமூகம், தனியார் நிறுவனம் போன்றவற்றின் பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

## விசர்நாய் தடுப்பு மருந்து ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் சுகாதார பரிசோதகர் பிரிவிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கான விசர்நாய்த்தடுப்பு ஊசி மருந்து இன்று காலை 9 மணி முதல் 12 மணிவரை தலையாழி இந்திரா சனசமூக நிலையத்தில் வைத்து ஏற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வீ.ப.வேலாயுதம்பிள்ளை மருத்துவமனைப் பொறுப்பாளர் ஈழவாணியிடம் மருந்துப் பொருட்களை கையளிப்பதைக் காணலாம். (122)

# கஞ்சா வைத்திருந்த நபருக்கு இரு வருட சிறைத் தண்டனை!

## யாழ். நீதிமன்றம் தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவருக்கு, யாழ்.நீதிமன்றம் இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கஞ்சாப் போதைப் பொருளைத் தனது உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கொட்டடியைச் சேர்ந்த இரத்தினம் பாலசிங்கம் என்பவரை யாழ்ப்பாணம் சிறு குற்றத்தடுப்புப் பொலிஸார் யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தனர்.

குறிப்பிட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகவும், 5 ஆயிரம் ரூபா தர்மப்பணமாகவும் செலுத்துமாறு யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

குற்றவாளி குற்றப்பணத்தை செலுத்தத் தவறியதையடுத்து நீதிவான் இரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# பட்டதாரிகளுக்கான நேர்முகத்தேர்வு 11 ஆம் திகதி மருதங்கேணியில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத் துறைகளில் பொருத்தமான வேலைகளுக்கு வேலையற்று இருக்கும் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 34 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் ஏற்கனவே விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் சமுகமளிக்குமாறு விண்ணப்பதாரிகள் கேட்கப்பட்டுள்ளனர். (122)

## தீவகத்திற்கான போக்குவரத்துச்சேவையை சீர்செய்யக்கோரி நெடுந்தீவு செயலகம் முன் மறியற் போராட்டம்!

(ஆழியவளை)

தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்தினைச் சீர்செய்யுமாறு கோரி நெடுந்தீவு பிரதேச செயலகம் முன்பாக மக்களை ஒன்று திரட்டி, தொடர்மறியல் போராட்டத்தினை நடத்தப்போவதாக நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் கனகலிங்கம் தெரிவித்தார்.

கடந்த பல வாரங்களாக தீவுப் பகுதி மக்களின் போக்குவரத்துச் சேவைகள் சீரற்றுள்ளது. கடல் போக்குவரத்து மாத்திரமின்றி தரைப் போக்குவரத்தும் சீரற்றே இடம்பெறுகிறது.

இந்த விடயம் சம்பந்தமாக பல தடவைகள் உரிய அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டுவந்தும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் ஏதும் எட்டப்படாததன் காரணமாகவே மறியல் போராட்டத்தில் ஈடுபட முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (122)

## உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

'தூய ஒளி' வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு குருநகர் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலய (பாடுமீன்) விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் அரை இறுதி மோதலில் பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இளவாலை யங் ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் மோதவிருக்கிறது. (206)

## ரூபா 60 லட்சம் செலவில் விஞ்ஞான ஆய்வுகூடம்

(யாழ்ப்பாணம்)

மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் 60 இலட்சம் ரூபா செலவில் விஞ்ஞான ஆய்வுகூடம், பிரார்த்தனை மண்டபம் வகுப்பறைகளைக் கொண்ட மாடிக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இந்த வித்தியாலயத்தில் கல்வித் திணைக்களத்தின் பொப்லொப் திட்டத்தின் கீழ் 20 இலட்சம் ரூபா செலவில் நூலகமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாக விததியாலய அதிபர் எஸ்.சிவபாலன் தெரிவித்தார். (17)

## ஆசிரியர் கலாசாலையில் முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் நடாத்தும் முத்தமிழ் விழா இன்றும் நாளையும் கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முத்தமிழ் மன்றத்தின் துணைத் தலைவர் ம.பிரபாகரன் தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்வில் யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

நாளை காலை 9 மணிக்கு முத்தமிழ் மன்றத்தின் தலைவர் கா. உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இளைப்பாறிய நீதிபதி மு.திருநாவுக்கரசு பிரதமவிருந்தினராகவும் முன்னாள் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் திலகவதி பெரியதம்பி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்.


நெஞ்சை விட்டு அகலாத
மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 16.02.1977



ஆண்டவன் அடியில் 27.05.2001

அமரர் பஞ்சரத்தினம் ஜனார்த்தனன்
திதி ஷஷ்டி

மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் திகழ்ந்தாய்
புனிதமாய் வாழ்ந்து எமக்கு புகழ் சேர்த்தாய்
இனிய உன்முகத்தை என்று நாம் காண்போம்
என்றும் உன் நினைவோடு இப்பூவுலகில் வாழ்கிறோம்

கலங்கும் விழிகளுடன் அப்பா, அம்மா, சகோதரர்கள், மைத்துனர்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

தகவல் : கு.பாபு (மச்சான்)
3/3 பத்திரகாளி கோவிலடி,
யாழ்ப்பாணம். (755)

ராஜா யாழ்ப்பாணம்.
3 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா
நடித்த
ஆய்த எழுத்து



காட்சிநேரம்:-10.30, 2.30, 6.30 மட்டும் (பு.நே)
(சி-2623)

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ்
நடித்த
கில்லி (நீல்ஸ்)



(சி-2622)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00

திரைஞ்சனஸ் சங்கானை
கார்த்திக், ரோஜா, மணிவண்ணன்
நடித்த
சின்னராஜா
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
AMERICAN PIE
(சி-2621)

வான் விற்பனைக்கு
58-XXXX தொடர் இலக்கமுடைய டொல்பின் ஓட்டமற்றிக் ரக வான் விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்.
தொடர்புகளுக்கு :
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்,
212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (சி/2648)

விற்பனையாளர் தேவை
எமது புத்தக நிறுவனத்திற்கு புத்தக அலுவலக உபகரண விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் தேவை.
இரு பாலரும் நேரில் வரவும்.
தொலைபேசி இல: 2225542
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்,
212, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். (சி/2647)

## தன்னாட்சி அதிகார சபைகுறித்த

## ஜே.வி.பியினரின் இறுதி நிலைப்பாடு

# இராஜதந்திரிகளிடம் கையளிக்கப்படுமாம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான ஜே.வி.பி. யின் இறுதி நிலைப்பாடு அமெரிக்க, இந்திய மற்றும் ஐரோப்பிய யூனியனின் இராஜதந்திரிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த வெளிநாட்டு இராஜதந்திரிகளின் பிரதிநிதிகளை, அவர்களின் கொழும்பிலுள்ள இல்லத்தில் தாம் சந்திக்கவுள்ளதாகவும், இந்தச் சந்திப்பின்போதே தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகசபை தொடர்பான தமது இறுதி நிலைப்பாட்டைத் தாம் அவர்களுக்குத் தெரியப்படுத்த உள்ளதாகவும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை தொடர்பான ஜே.வி.பி யின் நிலைப்பாட்டினை சர்வதேச நாடுகளுக்கும் தெரியப்படுத்த வேண்டிய அவசியம் கருதியே தாம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ள விமல் வீரவன்ச, இலங்கையின் இறைமை, பாதுகாப்பு மற்றும் சகல இனங்களுக்குமான சமவுரிமை என்பன பாதிக்கப்படாத வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டுமென பிரஷெல்ஸில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டின்போது உலக நாடுகளால் கருத்துத் தெரிவிக்கப்பட்ட தாகவும் தெரிவித்தார்.

# 2005 டிசம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும்

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு

அடுத்த ஜனாதிபதித் தேர்தலை அடுத்த வருடம் டிசம்பர் மாதம் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் 2005 ஆம் ஆண்டு இறுதியுடன் முடிவடைகின்றது. தேர்தல் சட்டங்களின் படி புதிய நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி தெரிவுசெய்யப்பட வேண்டும்.

புதிய ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி கோரப்படும்.

1999 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகச் சந்திரிகா குமாரதுங்க தெரிவு செய்யப்பட்டார். ஆறு வருடங்களைக் கொண்ட இவரது பதவிக்காலம் 2005 ஆம் ஆண்டுடன் முடிவடைவதாகப் பதில் தேர்தல் ஆணையாளர் கே.சேனநாயக்க தெரிவித்தார்.

இதனால், 2005 டிசம்பரில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார்.

அதேவேளை - இந்தவிடயம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்புவதற்கு நாடாளுமன்ற செயலாளர் பிரியானி விஜேசேகரவுக்கு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயகக கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ரவி கருணாநாயக்க, தமது கடிதத்தில் - 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டத்தின்படி இலங்கைப் பிரஜை ஒருவர் இரண்டு தடவைகள் மட்டுமே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் 2005 நவம்பர் 11 ஆம் திகதியா அல்லது நவம்பர் 2005 21 ஆம் திகதியா முடிவடைகிறது என்பதை விளக்கவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், அவர் மே 16 ஆம் திகதி வெளியான லங்காதீப பத்திரிகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசிலமைப்புச் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்து ஒருவர் மூன்று தடவைகள் ஜனாதிபதி பதவிக்குப் போட்டியிடலாம் எனத் திருத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாகச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இடைக்கால நிர்வாகத்தை கைவிடுமாறு கோருவது

# மீளப்போராட்டத்திற்குள் தள்ளும் நடவடிக்கை

## சிங்களப் பத்திரிகைப் பேட்டியில் சிவாஜிலிங்கம்



தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு இடைக்கால நிர்வாக சபை யோசனைகளை கைவிடவேண்டும் எனக்கோருவது, தமிழ் மக்களை மீண்டும் ஈழத்திற்கான போராட்டத்தினை நோக்கித்தள்ளும் ஒரு நடவடிக்கையே என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

சிங்களப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிர்வாக சபையினை நிறுவுவது அவசியம் என்பதனைத் தமிழ் மக்கள் கடந்த பொதுத்தேர்தலின் போது, தெரியப்படுத்தியிருக்கின்ற வேளையிலே அதனைக் கைவிட வேண்டும் என ஜே.வி.பி.கோருவதன்மூலம், இந்த இனமுரண்பாட்டுக்குப் பேச்சுவார்த்தைமூலம் தீர்வுகாண்பததை, அவர்கள் வரும்பவில்லை என்பதனையே அது உணர்த்துகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்காவிடின், ரோக்கியோ மாநாட்டில் கூறப்பட்ட உதவிகளை வழங்கப்போவதில்லை என, உதவி வழங்கும் நாடுகள் நெறிப்படுத்திய அறிக்கைக்குத் தாங்கள் மதிப்பளிப்பதாகவும், சர்வதேச சமூகமானது இந்தச் சிக்கலான பக்கம் தமது நடுநிலைமையான அவதானத்தினை செலுத்த ஆரம்பித்துள்ளமை, அதன் மூலம் தெரிய வருகிறது என அவர் குறிப்பிட்டார்.

இடைக்கால அதிகாரசபை யோசனையைக் கைவிட்டு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இறங்கிவருவதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமோ, தமது கூட்டமைப்போ எப்பொழுதும் ஆயத்தமாக இல்லை எனவும் அவர் வலியுறுத்தினார்.

தமிழ் மக்களது ஏகப்பிரதிநிதிகள், தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதும் இடைக்கால நிர்வாகத்தின் கீழ் முதலில் தமிழ் மக்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதும் அவசியமானது என்பதனைக் கடந்த பொதுத் தேர்தலின்போது உறுதிப்படுத்தியிருக்கும் வேளையில் - அரசு அதனைக் காணாததுபோன்று இருப்பது பெரிய பின்னடைவையே ஏற்படுத்தும்.

அரசினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஆதரவினைப் பெற்றுக்கொள்வதிலும், சமாதான முயற்சியைக் காண்பித்து வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்வதிலும் மாத்திரம் அரசு முயற்சி எடுத்தால் அது இல்லாத சிக்கல்களை உண்டுபண்ணும் எனவும் கருத்து தெரிவித்த அவர்,

விஷேடமாக - ஜே.வி.பியினர் நடத்தை பற்றி தமிழ் மக்கள் மிகுந்த கவலையுடன் இருக்கின்றார்கள். சமாதான முயற்சிகளை இடையில் நிறுத்தி, மீண்டும் யுத்தத்தினை அழைப்பித்து நாட்டினைச் சிக்கலில் ஆழ்த்திவிடுவதன்மூலம் அரசியல் இலாபம் பெறுவதற்கு அவர்கள் முயற்சிசெய்கிறார்களா? என வினவ நேரிடுகின்றது.

ஜே.வி.பி இன்று அரசின் உள்ளே களபரத்தை உண்டு பண்ணுவது அதன் பொருட்டா? அதிகாரத்தைத் தவிர நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகள் பற்றி எதுவித புரிந்துணர்வுடனும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஜே.வி.பி ஒன்றிணையவில்லை என்பது அதன்மூலம் நிருபணமாகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.





நேற்று முன்தினம் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்த மலையகம் மற்றும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் - முஸ்லிம் எழுத்தாளர்கள் நமது ஈழநாடு அலுவலகத்துக்கு வருகை தந்து கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படம்.

## கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒகஸ்ட்மாத இறுதியில் இந்தியா செல்வர்

(கொழும்பு)

தமிழ் மக்களின் அபிலாஷைகளை இந்திய அரசுக்கு தெளிவுபடுத்துமுகமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு இந்தியா செல்லவுள்ளது.

இந்த விஜயமானது எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதியில் இடம்பெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியாவின் ஆதரவு அவசியமெனவும், இது தொடர்பாக வன்னியில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட்டதாக அறியப்படுகின்றது.

இதற்கமையவே இந்த விஜயம் இடம்பெற இருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

# இரட்டைக்கொலைச் சந்தேக நபர்கள் பொலிஸாரால் இனங்காணப்பட்டனர்

(கொழும்பு)

பிரதியமைச்சர் சூரியாராச்சியின் அலுவலகத்துக்கு அருகிலும், ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலும் இடம்பெற்ற கொலைகளுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இளைஞர்கள் விவகார விளையாட்டுத்துறைப் பிரதியமைச்சர் சிறிபதி சூரியாராச்சியின் கிரிபத்கொட அலுவலகத்துக்கு அருகில் இடம்பெற்ற இரட்டைக் கொலையுடன் சம்மந்தப்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் பிரதியமைச்சரின் மெய்பாதுகாவலர்கள் இருவர் கொல்லப்பட்டதுடன் இருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர் ஒருவர் சக மாணவர் ஒருவரால் கூரிய ஆயுதத்தால் குத்திக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன், தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக விசாரிப்பதற்காக மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் மேலும் சில மாணவர்கள் விரைவில் கைதுசெய்யப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2002 ஆம் ஆண்டு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவன் அடித்துக் கொல்லப்பட்டிருந்தமையும், இந்தச் சம்பவத்துடன் ஜே.வி.பி ஆதரவு - மாணவர்களே தொடர்புபட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# உடன்படிக்கை தொடர்ந்தும் மீறப்பட்டால் அமைச்சுப்பதவிகளைத் துறப்போம்!

## ஜே.வி.பி எச்சரிக்கை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் சிறிலங்கா சுகந்திரக் கட்சியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை தொடர்ந்தும் மீறப்படுமானால், தமது அமைச்சுப் பதவிகளைத் துறக்கப்போவதாக ஜே.வி.பி. எச்சரித்துள்ளது.

கூட்டமைப்பு உடன்படிக்கையை மீறும் வகையில் அமைச்சரவையை விஸ்தரிப்பது, அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்களை நியமிப்பது போன்ற செயற்பாடுகள் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஜே.வி.பி.யினர் கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்தனர்.

இதற்குப் பதிலளித்து ஜனாதிபதி அனுப்பிய கடிதத்தில், ஜே.வி.பி.யினது கோரிக்கைகள் எவையென்று, தமக்குப் புரியவில்லை என்றும், அவற்றை தெளிவாக விளக்கும்படியும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்தப் பதில் குறித்து கடும் சீற்றமடைந்துள்ள ஜே.வி.பி தொடர்ந்தும் ஜனாதிபதி இத்தகைய செயற்பாடுகளை முன்னெடுத்தால், தமக்கு வழங்கப்பட்ட அமைச்சுப்பதவிகளை கைவிட்டு விட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களாகவே இருந்து மக்களுக்கு சேவை செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளது. இதேவேளை மாகாண சபைத் தேர்தல்களின் பிண்பு அமைச்சரவையில் மாற்றங்களைக் கொணடுவர ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்ற சில கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கும் வகையில் இந்த மாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

எனினும், ஜே.வி.பியோடு முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் அமைச்சரவை எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது எனவும் தெரியவந்துள்ளது.

இதற்கேற்ப ஜனாதிபதி தற்போது தம்வசம் வைத்துள்ள அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏனையவர்களுக்கு வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# பங்களாதேஷ் அணிக்கு எதிராக 559 ஓட்டங்கள் குவித்த மே.தீவுகள்

பங்களாதேஷ்"க்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது முதல் இனிங்ஸை 4 விக்கெட் இழப்பிற்கு 559 ஓட்டங்கள் என்ற இலக்குடன் நிறுத்தியது.

3 விக்கெட் இழப்பிற்கு 294 ஓட்டங்கள் என்ற நிலையில் மூன்றாவது நாள் ஆட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது நான்காவது விக்கெட்டை குறுகிய நேரத்தில் இழந்தது.

106 ஓட்டங்களை முதல் நாள் ஆட்டத்தில் பெற்றிருந்த சர்வானுடன், சந்தர்போல் இணைந்து பங்களாதேஷ் வீரர்களின் பந்துகளை விளாசித்தள்ளினர்.

இரு வீரர்களும் நிலைத்து ஆடியதன் மூலம் 4 விக்கெட் இழப்பிற்கு 559 என்ற நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் அணி ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

ஆட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபோது சர்வான் 402 பந்துகளில் 32 பவுன்டரிகள் அடங்கலாக 261 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

சந்தர்போல் 190 பந்துகளில் 11 பவுன்டரிகளுடன் 101 ஓட்டத்தைப் பெற்றார்.

இதையடுத்து இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி 20 ஓவர்களுக்குள்ளேயே 3 விக்கெட்டுககளை இழந்து 66 ஓட்டங்களைப் பெற்றது.

மூன்றாவது நாள் முடிவில் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது, 28 ஓட்டங்களுடன் ஹபிபுல் பஷாரும், மன்ஜுூரல் இஸ்லாம் ரமணா 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

# ஜேர்மன் பயிற்சியாளர்கள் யாழ்.வீரர்களுக்கு பயிற்சி!

யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட (பெண்களுக்கானது) மேசைப்பந்தாட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு தமிழீழ விளையாட்டுத்துறையின் ஏற்பாட்டில் ஜேர்மன் நாட்டிலிருந்து பயிற்சியாளர்கள் வருகைதந்துள்ளனர்.

ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் உதைபந்தாட்டப் பயிற்சியும், வை.எம்.சி.ஏ மண்டபத்தில் மேசைப் பந்தாட்டப் பயிற்சியும், யாழ்.பல்கலைக்கழக மைதானத்தில் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் பயிற்சியும் நாளை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.எனவே இந்தப் பயிற்சி நெறிகளில் ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாமென யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறையினர் கேட்டுள்ளனர்.

# முன்னாள் இந்திய அணித்தலைவர் மீது முரளி சட்ட நடவடிக்கைக்கு ஆலோசனை!

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான பிஷன் சிங் பேடி மீது முரளிதரன் சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளார்.

தன்னுடைய பெயருக்கும் புகழுக்கும் களங்கம் ஏற்படுத்தக் கூடிய கருத்துக்களை கூறிய இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனான பிஷன்சிங் பேடி மீது முரளிதரன் வழக்குத் தொடர்வது குறித்து யோசித்து வருகிறார்.

சமீபத்தில் நடைபெற்ற சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரின் போது, டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்த மேற்கிந்தியத்தீவுகள் அணியின் முன்னாள் வீரரான கொட்னி வோல்ஷின் சாதனையை முறியடித்து முரளிதரன் புதிய சாதனையைப் படைத்தார்.


தன்னுடைய பந்துவீச்சுக் குறித்து கேள்வி எழுப்பும் விதமாக தரக் குறைவான கட்டுரைகளை எழுதிய பிஷன்சிங் பேடி மீது வழக்குத் தொடர்வது குறித்து வழக்கறிஞர்களுடன் முரளிதரன் ஆலோசனை நடத்திவருகிறார்.




சமீபத்தில் பேடி எழுதிய கட்டுரையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் பற்றி ஆய்வு செய்துவருவதாக முரளிதரனின் வழக்கறிஞர் கூறியதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் அவுஸ்ரேலிய அணி இலங்கை வந்திருந்தபோது நடைபெற்ற டெஸ்ட் தொடரில் முரளிதரனின் பந்துவீச்சுக் குறித்து புகார் செய்யப்பட்டது. இதற்காக முரளிதரனுக்கு அவுஸ்ரேலியாவில் உடற்கூற்றுச் சோதனையும் நடத்தப்பட்டது. இதன் பிறகு முரளிதரனின் தூஸ்ரா பந்து வீச்சுக்கு தடையும் விதிக்கப்பட்டது.

இதற்கு முன்பு இரண்டு முறை முரளிதரனின் பந்துவீச்சுக் குறித்து புகார் செய்யப்பட்டது. 1995 இல் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த நடுவரான டேரில் ஹெய்டும் 1996-1997 இல் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த மற்றொரு நடுவரான ரகு ஹான்ரோஸ் எமர்சனும் முரளி தரனின் பந்துவீச்சுக் குறித்து புகார் செய்தனர். இந்தப் புகாரை ஆய்வு செய்த சர்வதேச கிரிக்கெட் சபை



நிபுணர் குழு முரளிதரன் பந்துவீச்சு முறை சரியே என்றும் கூறியது.

இருப்பினும் முரளிதரனை தொடர்ந்து பந்துவீச அனுமதிக்கக் கூடாது என்று பேடி தொடர்ந்து கூறிவந்தது குறிப்பிடத்தக்கது. அடிப்படையில் முரளிதரனின் பந்துவீச்சுமுறை முற்றிலும் தவறானது என்றும் பேடி தொடர்ந்து கூறிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

## பிரெஞ் ஓபன் ரெனிஸ்

# ஆண்கள் இரட்டையர் பிரிவில் பெல்ஜியம் வீரர்கள் சம்பியன்!



பிரெஞ் ஓபன் ரெனிஸ் போட்டியில் ஆண்கள் இரட்டையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை பெல்ஜியத்தின் ஷேவியர்மா லிஸ்சே, ஓலிவர்ரோகுஸ் ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது.

பிரெஞ்ச் ஓபன் ரெனிஸ் ஆண்கள் இரட்டையர் பிரிவு பட்டத்தை வென்றதன் மூலம் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் இரட்டையர் பிரிவு பட்டத்தை வென்ற முதல் பெல்ஜியம் ஜோடி என்ற பெருமையை இந்தஜோடி பெற்றது.

இறுதிப்போட்டியில் பெல்ஜியத்தின் மலிஸ்சே ரோகுஸ் ஜோடி 7-5, 7-5, என்ற செட்கணக்கில் பிரான்சின் பேப்ரைஸ்சாண்டோரோ, மிகேல் லோட்டா ஜோடியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் பெற்றது.

1953 ஆம் ஆண்டு நடைபெற்ற விம்பிள்டன் ரெனிஸ் போட்டியில் பெல்ஜியத்தைச் சேர்ந்த ஜாக்கிபிரிசான்ட், பிலிப்வாஷர், இருவரும் அரையிறுதிக்கு முன்னேறி இருந்ததே கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் பெல்ஜியத்தின் முந்தைய சிறப்பம்சமாகும்.

## பிரெஞ் ஓபன் ரெனிஸ்

# ஆண்கள் பிரிவு சம்பியனாக ஆர்ஜென்ரீன வீரர் கார்டியோ!



பிரெஞ்ச் ஓபன் ரெனிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை ஆர்ஜென்ரீனாவின் கஸ்டோன் கார்டியோ பெற்றார்.

பாரிஸில் நடைபெற்ற பிரெஞ்ச் ஓபன் கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்தவர்களான கில்லர்மோ கோரியா, கஸ்டோன் கார்டியோ இருவரும் மோதினர்.

இந்தப் போட்டியில் கார்டியோ 0-6, 3-6, 6-4, 6-1, 8-6, என்ற செட்கணக்கில் வெற்றிபெற்றார். பிரெஞ் ஓபன் ரெனிஸ் பட்டம் வென்ற தரவரிசையில் இடம் பெறாத 3-ஆவது வீரர் கார்டியோ ஆவார். 25 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்த வீரர் ஒருவர் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை முதன் முறையாக வென்ற பெருமையை பெற்றார். 27 ஆண்டுகளுக்கு முன்பு, கில்லர்மோ விலாஸ் பிரெஞ் ஓபன் பட்டத்தை வென்றதற்குப் பின்பு ஆர்ஜென்ரீனாவைச் சேர்ந்தவீரர் ஒருவர் பிரெஞ் ஓபன் பட்டம் வெல்வது இதுவே முதன் முறையாகும்.

ஆர்ஜென்ரீனாவிற்கு இது 5 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் ஆகும்.

இறுதிப் போட்டியில் முதல் இரண்டு செட்களையும் இழந்தாலும், அதன் பின்பு 3 செட்களையும் கைப்பற்றி சாம்பியன் பட்டத்தை கார்டியோ தட்டிச்சென்றார்.

4 ஆவது செட்டின்போது இடதுகாலில் ஏற்பட்ட காயத்திற்கு கோரியா சிகிச்சை எடுத்துக் கொண்டார். அதன் பின்பு பெயரளவிற்கே கோரியா விளையாடினார்.

இரண்டு முறை சாம்பியன் ஷிப் புள்ளிகளைப் பெற்றாலும் இதில் வெற்றி பெற தவறிய கோரியா இறுதியில் தோல்வியைத் தழுவினார்.

பிரெஞ் ஓபன் தரவரிசையில் இடம்பெறாத ஒருவீரர் சாம்பியன் பட்டம் வெல்வது இது 3 ஆவது முறையாகும். இதற்கு முன்பு 1997 ஆம் ஆண்டு நடைபெற்ற பிரெஞ் ஓபனில் 1982 இல் மாட்ஸ் விலாண்டர் தரவரிசையில் இடம்பெறாத நிலையில் பிரெஞ் ஓபன் பட்டம் வென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த சாம்பியன் பட்டமானது கார்டியோவுக்கு 3 ஆவது பட்டமாகும்.

# திறமையாக விளையாடாததால் ராவல் பிண்டி டெஸ்ட்டில் தோற்றோம்

## பாகிஸ்தான் அணிவீரர் யாசிர் ஹமீத்

பாகிஸ்தான் அணி வீரர்கள் தங்களுடைய திறமைக்கு ஏற்ப சிறப்பாக விளையாடாததால் இந்தியாவுக்கு எதிரான 3 ஆவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி தோல்விகண்டதாக அந்த அணியின் இளம் வீரரான யாசிர் ஹமீத் தெரிவித்துள்ளார்.

அறிமுக டெஸ்டின் இரண்டு இனிங்சிலுமே சதம் அடித்த வீரர் என்ற பெருமையைப் பெற்ற யாசிர் ஹமீத் இதுகுறித்து அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது, இந்தியாவுக்கு எதிராக ரா்வல் பிண்டியில் நடைபெற்ற 3 ஆவது டெஸ்ட் போட்டியில் எங்களுடைய வீரர்கள் தங்களுடைய திறமைக்கு ஏற்ப சிறப்பாக விளையாடவில்லை ன்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஒரு நாள் தொடாில் தோற்றதற்கு அதிஷ்டமின்மையே காரணமாகும்.

ஏறக்குறைய 15 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்திய கிரிக்கெட் அணி வரலாற்றுச்சிறப்பு மிக்க தொடரில் விளையாட பாகிஸ்தான் சென்றது. இதனால், இந்த தொடர் நல்லெண்ணத் தொடர் என்று அழைக்கப்பட்டது.

இருப்பினும், இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணி படுதோல்வி அடைந்ததால் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் பெரும் புயல் கிளம்பியது. குறிப்பாக அணி நிர்வாக வட்டாரத்தில் பெரும் சர்ச்சையே கிளம்பியது. இந்தியாவிற்கெதிரான தொடரில் தோல்வி அடைந்தாலும், பாகிஸ்தான் அணியின் கப்டன் பதவிக்கு இன்ஸமாமே தகுதியானவர் என்று, யாசிர் ஹமீத் கூறுகிறார்.

கப்டன் பதவிக்கு இன்ஸமாமை தவிர வேறு யாரும் பொருத்தமானவராக இருக்கமுடியாது. இளம் வீரர்களுக்கு எப்போதும் உற்சாகமும், உதவவும் கூடியவர் அவர். அவர் ஒரு சிறந்த கப்டன். பயிற்சியாளராக இருக்கும் ஜாவித் மியாண்டட்டும் இளம் வீரர்களுக்கு உதவி புரிவதில் சிறந்தவர். என்று யாசிர் ஹமீத் கூறினார்.

பாகிஸ்தான் அணியில் இளம் வீரர்களின் திறமை வெளிப்பாடு மகிழ்ச்சி அளிப்பதாகவும், இதனால் அணியின் சூழ்நிலை மாறி இருப்பதாகவும் யாசிர் ஹமீத் கருத்து தெரிவித்துள்ளார்.

## நியூஸிலாந்து டெஸ்ட்

# வெற்றிவாய்ப்பில் இங்கிலாந்து அணி

நியூஸிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முதலாவது இனிங்சில் 526 ஓட்டங்களைக் குவித்த இங்கிலாந்து அணி, இரண்டாவது இனிங்ஸில் 102 ஓட்டங்களுக்குள் நியூஸிலாந்து அணியின் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியதால் இப்போட்டியில் வெற் றிபெறக்கூடிய வாய்ப்புக்களைப் பெற்றிருக்கிறது.

மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் 4 விக்கெட் இழபபிற்கு 248 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த இங்கிலாந்து அணி, நான்காம் நாள் ஆட்டத்தில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 526 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்து அணிசார்பில் ட்ரெஸ் கோதிக் - 132, ஸ்ரரஸ்- 62, புச்சர் - 4, வோகன் - 13, தோர்ப் - 34, பிளின்ரொப் - 94, ஜோன்ஸ் - 100, ஜைல்ஸ் - 21, ஹோகாட் - 04, ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரைறிஸ் - 3 விக்கெட்டுக்களையும், மாட்டின், கெய்ன்ஸ், விக்ரோறி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ரபி ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முதல் இனிங்சில் நியூஸிலாந்து பந்துவீச்சாளர்கள் 62 உதிரி ஓட்டங்களைக் கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி 34 ஓவர்களுக்குள் 5 விக்கெட்டுக்களை இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது.

றிச்சர்ட்சன் - 40, பிளெமிங் 11, மக்கலம் 20, அஸ்லே 8, ரபி 7 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஸ்ரைறிஸ் 7 ஓட்டங்களுடனும், ஓரம் 4 ஓட்டங்களுடனும் நான்காம் நாள் முடிவில் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

முதல் இனிங்சில் நியூஸிலாந்து 409 ஓட்டங்களையே பெற்றிருந்த நிலையில், இறுதிநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வெற்றிபெறுவதற்கு சாத்தியங்கள் அதிகரித்துள்ளன.

# தீவகத்தில் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

ஆசிரியர் வளங்கள் குறைவாக உள்ளபோதும், தற்போது சேவையிலுள்ள ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுத்து வருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன் என நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து உரையாற்றுகையில் -

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆ.தியாகலிங்கம் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச மக்கள் பெரும் உழைப்பாளிகள். அவர்கள் தீவினை வளமாக வைத்திருப்பார்கள். என்றெல்லாம் அறிந்திருக்கின்றேன். இன்று அதனை நேரடியாகவே காண்கின்றேன்.

பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் பயிலுநர் ஆசிரியர்கள் குறைவாக உள்ளபோதும், உரிய வளங்களைக் கொண்டு நகர்ப்புறப் பாடசாலைகளைப் போன்று இங்கும் கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்து வரும் ஆசிரியர்கள் பாராட்டுக்குரியவர்களே.

நெடுந்தீவு பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் பற்றாக்குறையைப் புதிய ஆசிரிய நியமனங்களின் போது நிச்சயமாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்து, மேலும் கல்விச் செயற்பாட்டை முன்னேற்றகரமாக முன்னெடுக்க உரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தற்போது பாடசாலைகளை நேரடியாகப் பார்வையிட்டபோது, போதிய ஆசிரியர்கள் இன்றியும் பௌதீக வளங்கள் குறைந்த நிலையிலும் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும், கல்வி அமைச்சின் நிதியொதுக்கீடு மூலமும் நன்கு திட்டமிட்ட முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு, பௌதீக வளங்கள் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார். (113)

# நடுக்கடலில் பயணிகள் படகை வழிமறித்து கடற்படை சோதனை

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக்கான பயணிகள் சேவையில் ஈடுபடும் படகுகளை கடந்த சில நாட்களாக நடுக்கடலில் வழிமறித்துச் சோதனையிடும் நடவடிக்கை இடம்பெற்று வருகிறது.

நெடுந்தீவில் கரையோரப் பாதுகாப்பில் இருக்கும் கடற்படைப் படகுமூலமே இந்தநடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. சமாதான காலத்தில் நடைபெறும் இந்தச் சம்பவங்களால் நெடுந்தீவு மக்கள் பெரும் அச்சவுணர்வுடனேயே தங்கள் பயணத்தைத் தொடர்கின்றனர்.

இதேபோன்று கடந்த வெள்ளிக்கிழமை காலை குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு வந்துகொண்டிருந்த பயணிகள் படகான அக்குவாட்டிக்கினை மிரட்டியதுடன் பயணிகள் படகைப் பல தடவைகள் வேகமாச் சுற்றிவிட்டுச் சென்றுள்ளனர். கடும் கடற்கொந்தளிப்பு உள்ள தற்போதைய நிலையில் டோறாவின வேகத்தினால் படகு மூழ்கும்நிலை வரைக்கும் சென்று தெய்வாதீனமான முறையில் கரை சேர்ந்தது.

இதேவேளை டோறாப்படகில் இருந்த கடற்படையினர் மதுபோதையில் இருந்தாகவும் அந்தப் படகிற்குரிய இலக்கமோ, கொடியோ எதுவும் இல்லாது இருந்ததாகவும் படகில் பயணித்த பயணிகள் தெரிந்தவுடன் டோறாப்படகில் இருந்து வெளியேற்றப்படும் நீரினையும், பயணிகள் படகுக்குள் பாய்ச்சி, பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தியதாகவும் தெரிவித்தனர்.

இந்தவேளையில் பயணிகள் படகிலே நெடுந்தீவுப் பிரதேசத்தில் கடமையாற்றும் பொலிஸாரும் பயணம் செய்ததாகவும் தெரியவருகின்றது. (113)

# அளவெட்டியில் தகாத செயலில் ஈடுபட்ட இளைஞனுக்கும் யுவதிக்கும் பதிவுத்திருமணம்

ஆட்களற்ற வீடொன்றில் தகாத நடவடிக்கையில் ஈடுபட்ட போது கையும் மெய்யுமாகப் பிடிபட்ட இளைஞருக்கும், யுவதிக்கும் கலாசாரத்தை பேணும் இளைஞர் குழுவினர் பதிவுத் திருமணம் செய்து வைத்தனர். இந்தச் சம்பவம் அண்மையில் அளவெட்டிப் பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது - அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவத்தின் போது இரவுத் திருவிழாக்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறலாம் என்பதால், கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வந்தனர்.

அதன் போது மேற்குறித்த இளைஞரும், யுவதியும் பிடிபட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இருவரையும் பிடித்தவுடன் யுவதியின் பெற்றோருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டு, எச்சரிக்கை செய்யப்பட்டுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார். இளைஞனைத் தடுத்து வைத்திருந்த சமயம் அவர் அதிகாலை காவலில் இருந்து தப்பியோடிவிட்டார். கொழும்புக்குச் செல்ல முற்பட்ட போது வவுனியாவில் வைத்துக் கைது செய்யப்பட்ட,இவர் உடனடியாக அளவெட்டிக்கு கொண்டுவரப்பட்டு, சம்பந்தப்பட்ட யுவதியுடன் பதிவுத் திருமணம் செய்து வைக்கப்பட்டது. (94)

# இலக்கிய வட்ட ஏற்பாட்டில் சிறப்புற நடந்த பரிசளிப்பு விழா

இலங்கை இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் யாழ்.இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.இலக்கிய வட்டத்தின் தலைவர் செங்கை ஆழியான் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ் வில் தமிழ், முஸ்லிம் எழுத்தாளர் கள் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

ஆய்வுநூல், சிறுகதை, கவிதை, நாவல் எனப் பல்வேறு தமிழ் எழுத்துருவாக்கங்களைப் படைத்த படைப்பாளிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆய்வு நூல் எழுதியவர்களில் சாரல்நாடான்,பத்திரிகையாளர் நடேசையர் ,சி.மகேந்திரன் (தமிழர் முழவியல்), ரூபன் மரியாம்பிள்ளை (பத்திரிகையியலுக்கு ஓர் அறிமுகம்), கலாநிதி எஸ்.சிவலிங்கராசா (ஈழத்து இலக்கியச் செல்நெறி), கலாநிதி கே.குணராசா (ஈழத்துச் சிறுகதை வரலாறு) போன்றவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

நாவல் நூல்களில் முல்லைமணியின் (வன்னியர் திலகம்), ப.ஆப்டீன் (கருக்கொண்ட மேகங்கள்), செங்கை ஆழியான் (மரணங்கள் மலிந்த பூமி), அ.ஸ.அப்துல்லாமது (தர்மங்களாகும் தவறுகள்), கே. விஜயன் (மனநதியின் சிறு அலைகள்), தமிழ்க்கவி (இனி வானம் வெளிச்சிடும்), தெணியான் (கானலில் மான்) ஆகியோரின் நாவல்களுக்கும் - சிறுகதைகளில் எச்.ற.்.மத் எழுதிய (ஆளடையாள அட்டையும் ஐந்து ரூபாவும்), தி.ஞானசேகரனின் (அல்சேஸனும் ஒரு பூனைக்குட்டியும்), புலோலியூர் க.சதாசிவம் எழுதிய (புதிய பரிமாணங்கள்), கசின் சிவகுருநாதன் எழுதிய (கசின் சிறுகதைகள்), வண்ணை கே.சிவராசா எழுதிய (சிவாவின் சிறுகதைகள்), நீர்வை பொன்னையன் எழுதிய (வேட்கை), சுதாராஜ் எழுதிய (சுதாராஜின் சிறுகதைகள்), சிற்பி சரவணபவன் எழுதிய (சத்திய தரிசனம்), ஆ.தங்கராஜா எழுதிய (யுகம் ஒன்று உடைகிறது), முனியப்பதாசன் எழுதிய (முனியப்பதாசன் கதைகள்), செம்பியன் செல்வன் எழுதிய (சர்ப்ப வியூகம்) முதலியன பரிசில்கள் பெற்ற சிறுகதைகள் ஆகும்.

கவிதையில் சிவசேகரம் எழுதிய (வடலி) அமரதாஸ் எழுதிய (இயல்பினை அவாவுதல்), மேமன் கவி எழுதிய (மீண்டும் வசிப்பதற்கா), ஜெயசீலன் எழுதிய (கனவுகளின் எல்லை), இக்பால் அலி எழுதிய (புள்ளிகளில் சில புள்ளிகள்) வே.பஞ்சாட்சரம் எழுதிய (ச.வே. பஞ்சாட்சரம் கவிதைகள்) நூலுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து காவியத்தில் ஜன்னா சரிபுத்தீனின் ஜீன்னாஹ்வின் இரு குறுங்காவியங்கள் க.சச்சிதானந்தனின் யாழ்ப்பாணக் காவியத்திற்கும், நாடகத்தில் இ.முருகையன் எழுதிய சங்கடங்கள் நாடகத்துக்கும், எஸ். முத்துமீரான் எழுதிய மானிடம் சாகவில்லை நாடகத்திற்கும், அராலி யூர் சுந்தரம்பிள்ளை எழுதிய நாட கத்திற்கும், சிறுவர் இலக்கியத்தில் செங்கை ஆழியானின் பூதத் தீவுப் புதிர்கள் இலக்கியத்திற்கும், எஸ். உதயசந்திரனின் சிறுவர் நாடகங்கள் இலக்கியத்திற்கும், கே.குண நாதனின் நரியின் தந்திரம் இலக்கியத்திற்கும், ச.அருளானந்தனின் பயங்கொள்ளலாகாது பாப்பா இலக்கியத்திற்கும் செ.யோகநாதனின் காற்றின் குழந்தைகள் இலக்கியத்திற்கும் கோகிலா மகேந்திரனின் குயில்கள் இலக்கியத்திற்கும் செ.சத்தியனின் தங்க மூட்டிப் பூனையார் இலக்கியத்திற்கும் பரிசு வழங்கப்பட்டன.

இவற்றைவிட கனகசெந்தி கதா விருது எம்.என்.அமானுல்லா, ஆ.இரத்தினவேலான், எஸ்.உ பைதுல்லா, சி.கதிர்காமநாதன் ஆகியோருக்கும் வழங்கப்பட்டன.

# மூன்று அமுக்க வெடிகள் படையினரால் அழிப்பு!

## அளவெட்டியில் சம்பவம்

தோட்டக் காணியொன்றில் வெடிக்கத்தக்க நிலையில் கிடந்த மூன்று அமுக்க வெடிகள் மீட்கப்பட்டு, அவை இராணுவத்தினரால் வெடிக்கவைக்கப்பட்டன. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் அளவெட்டி பொன்னிப்புலம் பகுதியில் இடம்பெற்றது.

வெங்காயம் பயிரிடுவதற்காக தோட்டக்காணியை உழுதுகொண்டிருந்தபோது பொலித்தீன் பைகள் அடங்கிய பொதியொன்று காணப்பட்டதாகவும், அதனைப் பிரித்துப் பார்த்தபோது அதற்குள் அமுக்க வெடியொன்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக காணி உரிமையாளர் அளவெட்டி இராணுவத்தினருக்குத் தெரியப்படுத்தியபோது - அவர்கள் இராணுவத்தினரின் கண்ணிவெடி செயலிழக்கச் செய்யும் பிரிவினருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற இராணுவ வெடிபொருள் அகற்றும் பிரிவு, அந்தப் பகுதியில் மேலும் இரு சக்திவாய்ந்த குண்டுகளைக் கணடெடுத்ததுடன் அவற்றைப் பாதுகாப்புடன் செயலிழக்கவைத்தனர்.

மீட்கப்பட்ட வெடிபொருட்கள் இராணுவ டாங்கிகள், கவச வாகனங்கள் என்பவற்றைத் தகர்ப்பதற்கு பயன்படுத்தப்படுவது என இராணுவத்தினர் தெரிவித்தனர். கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது இவை புதைக்கப்பட்டிருக்கலாம் என இராணுவத்தினர் தெரிவித்தனர். (94)

# புதிய படகை சேவையில் ஈடுபடுத்தக் கோரிக்கை

நெடுந்தீவுக்கான கடற்போக்குவரத்து சேவை சீராக்கப்படவும், புதியபடகினை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு தென்னிந்திய திருச்சபையின் யாழ். மறை மாவட்ட பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன் பிரதமரிடம் கோரியுள்ளார்.

கடற்போக்குவரத்து சீரின்மையால் நெடுந்தீவு மக்கள் படுகின்ற அவலமான, ஆபத்தான பயணத்தைப்பற்றி நேரடியாகப் பிரதமருக்கு எடுததுக் கூறியுள்ளதாகவும், உடனடியாக நடவடிக்கையெடுப்பதாகப் பிரதமர் உறுதியளித்து, இவ்விடயம் தொடர்பாக உரியவர்களுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் இதற்கான நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் திருச்சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த வருடத்தில் பேராயர் பெரும் சிரமங்களின் மத்தியில் நெடுந்தீவு திருச்சபைக்குப் பயணிகள் படகுமூலம் வந்ததால் இங்குள்ள போக்குவரத்தசிரமங்களை நேரடியாக அனுபவித்தமை இங்கே குறிப்படத்தக்கது.(113)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலளர் பிரிவுக்குக்குபட்ட வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பினை வழங்குவதற்கான நேர்முகத் தேர்வுகள் எதிர்வரும் 9,10,11 ஆம் திகதிகளில் பிரதேச செயலகத்தில் நடைபெற உள்ளது.

இந்தப் பட்டதாரிகள் நியமனத்திற்காக சுமார் 215 வரையான விண்ணப்பப் படிவங்கள் செயலகத்திற்குக் கிடைத்துள்ளதாகவும், அவ் விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகத் தேர்வு அழைப்பு கடிதங்கள் தபால் மூலமாக உரிய விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் வலிதென்மேற்கு பிரதேச செயலர் தெரிவித்தார். (44)




இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் - எழுத்தாளர் உதயசந்திரனின் தாயார் பரிசில் பெறுவதை முதற்படத்திலும், எழுத்தாளர் ஜுன்னாசரிபுத்தீன், கவிஞர் முருகையன் ஆகியோர் பரிசு வழங்கி கௌரவிக்கப்படுவதை இரண்டாம், மூன்றாம் படங்களிலும் காணலாம்.



# பண்டேஜ் சிகிச்சை

நரிழிவு நோயாளிகளுக்குத் தாங்களாகவே தங்கள் நோயைக் குணப்படுத்தக்கூடிய புதியவகை பண்டேஜ் ஒன்று ஷெவீல்ட் பல்கலைக்கழத்தினால் உருவாக்கப்பட்டிருக்கின்றது.


நீரிழிவு நோயாளிகள் இந்த பண்டேஜ் இனை அணிவதனால் அவர்களுடைய நீரிழிவு நோயின் தாக்கம் ஏறக்குழைய 8 வாரங்களில் குறையும் எனக் கூறப்படுகின்றது. இந்த பாண்டேஜ் இல் காணப்படும் விசேட கலங்கள் வைத்தியர்களால் ஆய்வு கூடங்களில் உருவாக்கப்பட்டிருக்கிறது. இதில் காணப்படக்கூடிய கலங்கள் மனித கலங்களுடன் ஒத்தாக இருக்கின்றன. இது சாதாரண பண்டேஜ் போன்றே சுற்றுப்படுகின்றது. வெளியில் பார்க்கும் போது, இது சாதாரணமாகத்தான் இருக்கும். இது ஒவ்வொரு கிழமையும் பாவிப்பதால் நீரிழிவு நோயின் அளவு சடுதியாகக் குறையாமல் ஒரு குறித்த அளவில் குறைகின்றது. உணவுக்கட்டுப்பாடற்ற முறையில் நீரிழிவு நோய்க்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்கள், மற்றைய சிகிச்சை முறைகளைவிட இந்தச் சிகிச்சை முறையையே அதிகம் விரும்புகின்றார்கள். இதன் மூலம் உடலில் நீரிழிவினால் வரக்கூடிய நோவும் குறைகின்றது.



# புதிய தொலைநோக்கி

நாஸா விண்வெளி ஆய்வுகூடத்தில் காணப்படுகின்ற ஸ்பிட்ஸர் தொலைநோக்கி மிகக்குறைந்த வயதுடைய கிரகம் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கின்றார்கள் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள். நாஸாவில் அண்மையில் நிறுவப்பட்ட இன்பராரெட் தொலைகாட்டியாகிய இது மிகவும் ஊடுருவல் திறன் கூடியது. இதன்மூலம் 420 ஒளி யாண்டுகள் தூரத்தில் இருக்கின்ற கோக்குடா 4 என்ற நட்சத்திரம் பார்க்கப்பட்டிருக்கின்றது. முன்னர் இருந்த தொலைநோக்கிகளால் தூசு துணிக்கைகள் மற்றும்சில ஊடுருவமுடியாத பதார்த்தங்களுக்கு





அப்பால் காணப்படு கின்ற கிரகங்களை அடையாளம் காணமுடியாது.

ஆனால், இது அப்படியே துல்லியமாக வானவெளியிலுள்ள கிரகங்களைப் பார்க்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனால், பெறப்பட்ட ஒரு மிகச் சிறந்த நன்மை எதுவெனின், அண்மையில் பிறந்த 300 இற்கும் அதிகமான புதிய நட்சத்திரங்கள் அதாவது ஏறக்குறைய 13,700 ஒளியாண்டுகளுக்கும் அதிக தூரத்தில் இருக்கின்றன.

அவற்றினை இந்தப் புதிய வகைத் தொலைநோக்கிமூலம் பார்க்கக் கூடியதாக இருப்பதாகும்.

# எச்.ஐ.வி. எதிர் பக்றீரியா



உலகையே உலுக்கிவரும் பயங்கர நோயாகிய எச்.ஐ.வி. நோய்க்கு மருந்துகளே இல்லாத நிலையில் எமது உடலில் காணப்படும் நட்புரீதியாக செயற்படக்கூடிய பக்றீறியா ஒன்று உள்ளதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தர்க்கித்திருக்கின்றார்கள்.

இலினோயிஸ் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் ஒரு எயிட்ஸ் நோயாளியாகிய தாய் - குழந்தைக்குப் பாலூட்டும்போது குழந்தையின் வாயில் காணப்படும் ஒரு வகையான பக்கீரியாவானது எச்.ஐ.வி. கிருமிகளைத் தடுப்பதாகக் கூறியிருக்கின்றார்கள். இந்த பக்றீறியாக்கள், வைரஸ் கிருமிகளைச் சுற்றி ஒருவகையான இனிப்புத்தன்மையான போர்வையால் மூடிவிடுகின்றன. இதன்மூலம் வைரஸின் செயற்பாடுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

இதன் காரணமாக எப்போதும் பிறந்த குழந்தைக்கு முலைகள்மூலம் பாலூட்டுவது மிகவும் சிறந்தது என உலகளாவியரீதியில் 800,000 தாய்மார்களில் செய்யப்பட்ட பரிசோதனைகள் கூறுகின்றன. இது தாய்மூலம் குழந்தைகளுக்கு எச்.ஐ.வி நோய் தொற்றுவதைத் தடுக்கக்கூடிய இலகுவான முறையாகக் காணப்படுகின்றது.

# வயர்லெஸ் பைக்




கணினிகளை எங்கெல்லாம் புகுத்தமுடியுமோ அங்கெல்லாம் கண்டு பிடிப்பார்கள் தங்களுடைய கைவரிசையைக் காட்டியிருக்கின்றார்கள். யூரி ஜிட்மன் என்பவர் சைக்கிளைக் கணினி மயப்படுத்தி அதன்மூலம் ஒரு புதிய கண்டுபிடிப்பினை நியூயோக்கில் அறிமுகப்படுத்தியிருகின்றார்.

இது ஒரு மஜிக் பைக் எனக் கூறப்படுகின்றது. இதிலே மொபைல் தொலைபேசி வசதியும் காணப்படுகின்றது. 1980 ஆம் ஆண்டில் இருந்து இப்படியான முயற்சிகள் நடைபெற்று வந்தன. ஆனால், இப்போதுதான் அதற்கான வெற்றி கிடைத்திருக்கின்றது. இந்த மஜிக் சைக்கிளில் இன்ரநெற் மற்றும் ஈமெயில் வசதிகளும் காணப்ப ின்றன.

இப்படியான சைக்கிள்களுக்குத் தங்களுடைய செலூலர் நெட்வோர்க் அமைப்பைப் புகுத்துவதற்குப் பல முன்னணி நிறுவனங்கள் போட்டிபோட்டுக் கொண்டு வருகின்றன.

ஆனால், இப்படியான ஸைக்கிள்களை உருவாக்குவதில் பல சட்டச்சிக்கல்கள் வந்திருக்கின்றன. இதனைச் சட்டபூர்வமாக உருவாக்க ஜிட்மன் அதீத முயற்சி எடுத்துக்கொண்டு வருகின்றார். மக்களுக்கு மிகவும் பயன்படக்கூடிய வெப்சைட்டுடன் கூடிய வயர்லெஸ் சைக்கிள்கள் நியூயோர்க் நகரம் முழுவதும் உலாவருகின்றன. இப்படியான திட்டங்களை டாக்சிகளிலும் புகுத்தினால் நல்லது என மக்கள் நினைக்கின்றார்கள்.

# முக்கோண விமானங்கள்



விமானங்கள் முதன் முதலில் கண்டுபிடிக்கும் போது, அவற்றின் பறப்புப் பற்றித்தான் சிந்திக்கப்பட்டது. அவற்றின் மொடல்கள் பற்றி ஒருவருமே சிந்திக்கவில்லை. ஆனால் தற்போது விதம் விதமான மொடல்களில் விமானங்களை உருவாக்குவதற்கு கேம்பிறிட்ஜ் இல் இருக்கின்ற எம்ஜரி பொறியியல் நிறுவனம் ஆராய்ச்சிகளை செய்து கொண்டிருக்கின்றது. விமானங்களின் சத் தங்களை குறைப்பதற் கான முயற்சிகளும் விஞ்ஞானிகளால் நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ஆய்வுகளால் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புத் தென்படுகின்றது. எஸ்.ஏ.ஐ நிறுவனம் முக்கோண வடிவான விமானங்களைத் தயாரித்து, சந்தையில் விட்டிருக்கின்றது. இந்த வகை விமானங்கள் விமான நிலையத்தில் தரையிறங்கும்போது, விமான நிலையத்தில் இருக்கின்ற பயணிகள் காதுச்சவ்வு வெடிக்கக்கூடிய ஆபத்து இருக்கிறது. அவ்வளவு பேரிரைச்சல் கொண்டது. இந்த விமானத்தின் ஒலி, இவ்வகை விமானங்கள் 2003 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வான் வெளியில் பறக்கத் தொடங்கின. இப்படியான விமானச் சத்தங்களால் 2015 ஆம் ஆண்டளவில் 800,000 இற்கு மேற்பட்ட மக்கள் கேட்டல் குறைபாடுகளை எதிர்நோக்குவார்கள் என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆனால் விமான ஒலியைக் குறைப்பது என்பது சாத்தியமாகாத விடயம். ஆனால், விமானங்கள் இயங்கும்போது அவற்றின் ஒலியைக் குறைக்கக் கூடிய ரன்வே அமைப்புக்களை உருவாக்கும் முயற்சிகளில் தொழில் நுட்பவியலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.



# அற்புதமான பருந்துகள்

முதல் தடவையாக ஸ்கொட்லாந்திலே பொன்னிறமுள்ள பருந்து உருவாக்குதற்கான முயற்சி நடைபெற்றுக்கொண்டு வருகின்றது. ஆபெர்டி பல்கலைக்கழத்தில் ஆராய்ச்சியாளர்கள் இந்த முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். உலகிலேயே மிகவும் அரிதான இனமாகிய இந்தப் பொன்னிறமான பருந்துகள், தாமாக உருவாகுவது மிகவும் குறைவு. இந்த முயற்சி வெற்றி பெற்றால் அதனைத் தொடர்ந்து டயமண்ட் மற்றும் முத்து என்று அழைக்கப்படுகின்ற அரிதான பருந்து இனங்களையும் உற்பத்தி செய்வதற்கான இந்த முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.



இந்த அடைகாப்பு முயற்சியில் சில தடைகள் காணப்படுகின்றன. அவை என்னவென்றால், சில இயற்கைச் சூழல் இந்த முட்டை பொரிப்பதற்குத் தேவைப்படுகின்றன. அதற்கான இயற்கைச் சூழல் கிடைப்பது மிகவும் அரிது என ஆராய்ச்சியாளர்கள் கருகின்றார்கள். வெள்ளை வாலினை உடைய கடல் பருந்துகளை உருவாக்குவதில் பிறவுன் என்ற விஞ்ஞானி வெற்றிபெற்றிருக்கின்றார். அவருடைய கருத்துப்படி, புதிய வகைப் பருந்துகளை உருவாக்குவதில் இயற்கையை மிஞ்சுவது கடினம் என்பது உண்மையாகத்தான் இருக்கிறது.

# திரை விமர்சனம்



## ஆயுத எழுத்து

இது 'அமோரஸ் பெர்ராஸ்' என்ற ஸ்பானிஷ் படத்தை தழுவியது. ஆனால், தமிழிலே மிகவும் தனித்துவமாக வெளிவந்திருக்கின்ற படம் என்றே கூறுதல் வேண்டும். படத்தின் முதற் காட்சியிலேயே சூர்யா, மாதவன், சித்தார்த் என மூன்று கதாநாயகர்களையும் அறிமுகப்படுத்துகின்றார் இயக்குநர்.

சூர்யா பைக்கில் செல்ல அவரைப் பின் தொடர்கின்றார் மாதவன். ஓட்டோவில் செல்லும் காதலியைப் பிடிக்க சூர்யாவிடம் லிப்ட் கேட்கின்றார் சித்தார்த். சூர்யாவை மாதவன் சுட அவரை காப்பாற்றி மருத்துவமனையில் சேர்க்கின்றார் சித்தார்த்.

இந்த மூவரின் வாழ்க்கைப் பாதைதான் படக்கதை. இதனையே ஆயுதஎழுத்தாக (∴) காட்டியிருக்கின்றார் இயக்குநர் மணிரத்னம்.

சுயநலவாதியாகிய அடியாள் மாதவன், நியாயத்திற்காகப் போராடும் மாணவத் தலைவன் சூர்யா, வாழ்க்கையை அனுபவிக்கத் துடிக்கும் சராசரி மனிதனாக சித்தார்த் என்கின்ற மூன்று பாத்திரங்கள். சூர்யாவிற்கு ஜோடி ஈஷாதியோல். இவர் நட்சத்திரத் தம்பதிகள் தர்மேந்திரா, ஹேமமாலினி ஆகியோரின் மகள். நடிப்பில் மாதவனுடன் சரியாக சூர்யா மோதியிருக்கின்றார். மாதவனுக்கு ஜோடி மீரா ஜஸ்மின். மாதவன் தன்னைக் கொல்லவந்த அண்ணனைக் கொல்கிறார். அத்துடன், திருந்தும்படி கூறும் அண்ணனையும் கொல்கிறார் ஏன் என்று புரிபடவில்லை. மாதவன் மீரா ஜஸ்மின் காதல் கொஞ்சம் ஓவர்.

சித்தார்த்திற்கு ஜோடி திரிஷா. அரசியல்வாதி வில்லனாக பாரதிராஜா வருகின்றார். நடிப்பதற்கு சொல்லித்தர வேண்டுமா? ரவி கே.சந்திரனின் ஒளிப்பதிவு.

சாபு சிரிலின் கலை. விக்ரம் தர்மாவின் சண்டைக் காட்சிகள். எல்லாமே சிறப்பாக இருக்கின்றன. வைரமுத்து, ஏ.ஆர்.ரஹ்மான் கூட்டணி இம்முறை வெற்றி பாடல்கள் இருந்தாலும், தொடர்ச்சியற்ற திரைக்கதையும் கதையை முடிக்க வேண்டிய அவசரமும் படத்தினைச் சற்றுத் தடுமாற வைத்துவிட்டனர்.


-PNS-

# உயர்ந்த பாலம்



உலகிலேயே அதியுயர்ந்த பாலம் பிரான்ஸ் நாட்டின் தென் பிராந்தியத்திலே உருவாக்கப்பட்டிருக்கின்றது. டார்ன் ஆறு மற்றும் மாசிங் மத்திய மலைகளுக்கிடையில் ஏறக்குறைய 2.5 கிலோமீற்றர் நீளமானதும், 270 மீற்றர் உயரமுடையதுமாக ஒரு பாலம் பாதையைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. ஆனால், இதனைவிட உயரமானதான 340 மீற்றர் உயரமான மில்லாவ் பாலம் இரட்டைப் பாதைகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டிருக்கின்றது.

இபெல் கோபுரம் 343 மீற்றர் உயரமானது. அதனைக் கிட்டத்



தட்ட தொடுமளவுக்கு இந்தப் புதிய பாலம் உருவாக்கப்பட்டிருக்கின்றது. கிட்டத்தட்ட 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் இந்தப் பாலம் அமைக்கப்பட்டிருக்கின்றது.


அது ஒரு அசாதாரணமான முயற்சி என்று பாராட்டப்பட்டிருக்கின்றது. இது கட்டிமுடிப்பதற்கு மூன்று வருடங்கள் எடுத்திருக்கின்றது. இது சில மாதங்களுக்கு முன்பே முடிந்திருக்கும். ஆனால், கடந்த வருடம் பிரான்ஸ் நாட்டில் காணப்பட்ட அதிக வெப்பம் காரணமாக அதாவது, வெப்ப காலத்தில் உருக்கி ஒட்டுதல் போன்ற வேலைகளைச் செய்ய முடியாதிருந்த காரணத்தினால் அண்மையில் வந்துசென்ற குளிர்காலத்திலேயே அந்தக் குறைவேலைகள் பூர்த்திசெய்யபட்டு இருக்கின்றன.

# சீனா



சீனா கூடுதலாக இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படுகின்றது. ஏன் சீனா மட்டும் பாதிப்படைய வேண்டும். இதற்கான காரணங்களை அறிவதற்கு ஐரோப்பிய விண்வெளி ஆய்வு மையத்துடன் சீனா தற்போது இணைந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக

## அழிவிலிருந்து தப்புமா?



விண்வெளியில் செய்மதிகள்கூட ஏவப்பட்டு ஆய்வுகள் நடாத்தப்படுகின்றன. சீனாவும், ஐரோப்பாவும் சேர்ந்து செய்கின்ற இந்த ஆராய்ச்சி - 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆனால், இப்படியான ஆராய்ச்சிகளில் ஈடுபடுவதற்கான பிரானஸ் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளும் முன்னிற்கின்றன. என்வைஸட் என்கின்ற செய்மதி 2002 ஆம் ஆண்டு இந்த வகையான ஆராய்ச்சிகளுக்காகவிண்வெளியில் ஏவப்பட்டது. ஆராய்ச்சிகளின் முடிவில் ஆறுகள், மலைகள் ஆகியவற்றில் காணப்படுகின்ற சில அசாதாரணமான நிலைகளே சீனாவில் அடிக்கடி ஏற்படும் இயற்கை அனர்த்தங்களுக்கான காரணம் எனக் கூறப்படுகின்றது.

# ஆரோக்கியமான விமானப் பயணம்

விமானங்களில் பயணஞ்செய்யும்போது, அங்கே முதலுதவிச் சிகிச்சைகள் காணப்படுகின்றன. ஆனால், விமானங்களில் பயணஞ்செய்யும்போது பாரதூரமாக ஏதேனும் நோய்கள் வரும்போது ஏதேனும் சிகிச்சை முறைகள் இருக்கின்றதா? ஆம் இப்போது கூடுதலான விமானங்களில் எல்லாவிதமான மருத்துவ வசதிகளும் காணப்படுகின்றன. இதற்காக விமானங்களில் மருத்துவத்திற்கென ஒரு கபினும் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்



மூலம் பயணிகளின் உயிர்மட்டுமல்ல, உடல் ஆரோக்கியமும் பாதுகாக்கப்படுகின்றது. இதய அமுக்கமுள்ள நோயாளிகள் விமானத்தில் பயணஞ்செய்யும் போது, அவர்களுக்குரிய சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு பயணிகளினதும் தேக ஆரோக்கிமும் தனித்தனியே கவனிக்கப்படுகின்றது. இதன் காரணமாக விமானப் பயணிகளின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. விமானப் பயணத்தினைப் பயங் காரணமாக வெறுத்தவர்கள்கூட இப்போது விமானத்தின் சொகுசுப் பயணத்தினை விரும்புகின்றார்கள். இவ்வகையான பயணிகள் ஆரோக்கியப் பாதுகாப்பு எதிர்வரும் காலங்களில் கட்டாயச் சட்டமாக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# பற்களுக்காக



பற்சுகாதாரம் என்பது மிகவும் முக்கியமானது. 10 பல்வைத்தியர்களில் 6 பேர் பல்வைத்தியத்தில் தேசிய சுகாதார நிறுவனம் (NHS) இனால் எச்சரிக்கை செய்யபட்டிருக்கின்றார்கள். அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்ற சில ஆலோசனைகளைப் பல் மருத்துவர்கள் செவிமடுப்பதில்லை. பல் வைத்தியர்கள் பாவிக்கின்ற ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியன சுகாதார சேவை நிறு வனத்தினால் அங்கீகரிக்கப்பட்டவையாக இருக்கவேண்டும். இங்கிலாந்து நாட்டில் பல் வியாதிகளால் துன்பப்படுகின்ற மக்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. பற்களில் காணப்படும் கிருமிகள், வேறுவியாதிகளையும் தோற்றுவிக்கக்கூடியது எனப் பல ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். கிட்டத்தட்ட 7000 பல் மருத்துவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்குமாறு சுகாதார நிறுவனம் உத்தரவிட்டிருக்கின்றது. பல் மருத்துவர்கள் சிலர் - தங்களுடைய தனியார் மருத்துவமனைகளில் செய்கின்ற சேவைகளை விடவேண்டிய கட்டமும் ஏற்படுமென அரசாங்கம் எச்சரிக்கின்றது. ஏனெனின், அரச வைத்தியசாலைகளைவிட தனியார் மருத்துவமனைகளில்தான் பற்சிகிச்சை முறைகள் ஏனோதானோ என செய்யப்படுகின்றது.

# காஸ் கார்

கார்க் கம்பனிக்கிடையே ஏற்பட்ட போட்டியின் பயனாக எம்.ஜி ரோவர்ஸ் முதல்முறையாக குறைந்த பட்ஜட்டுக்குள் கட்டுப்படியாகக் கூடிய கார் எஞ்ஜின் ஒன்றைப் பேர்மிங்காம் மோட்டார் காட்சியில் விட்டிருக்கின்றது. டீசல் காரிலும் பார்க்க, பெட்ரோல் கார் மிகவும் சிறந்தது என எல்லோரும் கூறுகின்றார்கள். ஆனால் அண்மையில், ஆபத்தாக இருந்தாலும் மிகவும் சிக்கனமாகக் காணப்படுகின்ற



எரிபொருளாக எல்பி காஸ் காணப்படுகிறன்றது. ரோவர் 75 என்ற எஞ்ஜின் தான் கார் ஷோவில் காணப்படுகின்ற சிக்கனமான இஞ்ஜின். ஐரோப்பிய நாடுகளில் பெட்ரோலியப் பொருட்களின் விலை விஷம்போல ஏறிக்கொண்டே போகிறது. இதன்காரணமாக குறைந்த பெற்றோலில் அதிக தூரம் ஓடக்கூடிய கார்களின்மீது பற்று அதிகரித்திருக்கின்றது. ஹொண்டா சிலிக் கார்க் கம்பனியானது ஒரு மின்சாரத்தினால் இயங்கக்கூடிய மோட்டார் ஒன்றை எஞ்ஜினில் பொருத்தி அதன்மூலம் எல்பி காஸ் மூலம் கார்களை இயங்கவைக்க 2,000 ஸ்ரேலிங் பவுண்ஸ் செலவாகின்றது. யப்பான் கார் நிறுவனமாகிய டொயோட்டா காரும் இப்படியான எஞ்சினை எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகிய சக்தியுடன் இயங்கவைக்கக்கூடிய தொழில் நுட்பத்தினைப் புகுத்தியுள்ளது. கிட்டத்தட்ட 2007ஆம் ஆண்டின் பிறகு பெற்றோல் மற்றும் டீசல் பாவனைக்கு மக்கள் டாட்டா காட்டக்கூடிய நிலையிருக்கிறது.

ஆனால், டொயோட்டாவிலும் பார்க்க ஹோண்டா எஞ்ஜினே நன்கு சிறப்பான ஒலியமைப்பைக் கொண்டிருக்கின்றது. இந்த கைபிறைட் எஞ்ஜின் செயற்பாடு அடுத்த வருடம் நிஸ்ஸான் ரக கார்களில் புகுத்தப்பட இருக்கின்றது. தற்போது அமெரிக்கா தன்னுடைய நாட்டுத் தயாரிப்புக்கார்களுக்கும் இந்த வகையான எஞ்ஜின் செயற்பாடுகளைப் புகுத்த இருக்கிறது. இந்த முறைமூலம் சூழல் மாசடைதலும் தடுக்கப்படுகின்றது. ஆனால், சிறியளவுக் கார்களை விரும்புபவர்களுக்கு இது பொருத்தமானதல்ல. ஆனால், போர்ட்கார்க்கம்பனி இந்த வகைக்கார்களை அவ்வளவாக விரும்பவில்லை.

செய்திக் கட்டுரை

எஸ்.ஜெயா

# வரணியில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தியை இனங்கண்டு கொள்வோம்

நாட்டில் கடந்த காலங்களைப் போன்றே நிகழ்காலத்திலும், அபிவிருததிப் பணிகளில் ஈடுபட மக்கள் பிரதிநிதிகள் முனைப்பாகச் செயற்படத் தொடங்கியுள்ளனர்போல் தெரிகின்றது. இவர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட, பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்தே, கிராம மட்டத்திலிருந்து - நகரமட்டம் வரை அபிவிருத்திப் பணிகளை நகர்த்திச் செல்கின்றனர்.

இவ்வாறே கடந்த காலங்களில் வரணிப் பிரதேசத்திலும், அபிவிருத்திப பணிகள் இடம் பெற்றன. ஆனால், இங்கு அபிவிருத்திப் பணிகள் ஒரு சில ஊர்களை மையப்படுத்தப்பட்டதாகவே செயற்படுத்தப்பட்டமை பெருங்குறைபாடாகும். இதற்குக் காரணம் குறிப்பிட்ட சில அரசியல் செல்வாக்குகள் என்று கருதப்படுகின்றது. இந்தச்செல்வாக்குகளால் அவ்வாறான பிரதேசங்களை திண்மப்படுத்தியுள்ளனர் எனலாம்.

இவ்வாறே கடந்த காலங்களில் குறிப்பிட்ட சிலரின் காணிகளுக்குச் செல்வதற்கான தெருக்கள் செப்பனிடப்பட்டன. மின்சார விநியோகமும்மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு, தமது வசதிகளைப் பெருக்கிக்கொள்ள அரச நிதி அபிவிருத்தி என்னும் பெயரில் முடக்கபட்டதோடு, அரசியல் வாதிகளும் உடந்தையாகச் செயற்பட்டனர் என்பது மனவேதனைக்குரிய தொன்றாகும்.

கிராம அபிவிருத்தி என்னும் பெயரில் செல்வாக்கு அரசியலை பயன்படுத்துவது, ஏனைய பிரதேச மக்களின் அபிவிருத்தி ஜனநாயகத்தினை சுரண்டுவதற்கு ஒப்பானதாகும்.

எனவேதான் கடந்த காலங்களைப் போன்றும் இந்த முறையும் அபிவிருத்தியில் இத்தகைய செல்வாக்குகளுக்கு ஆட்படாது, பரவலாக்கப்பட்ட அபிவிருத்தி மட்டத்தினை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பது கட்டாய தேவையாகும்.

ஆனால், இந்த முறையும் இப்படிப்பட்ட திட்டமிடல் முறையே சில நாடாளுமன்ற உறுப்பினர்களால் மேற்கொள்ள தீர்மானித்திருப்பதாக மக்கள் தமக்குள் பேசிக் கொள்கின்றனர். அவ்வாறாயின், அவர்கள் கவனத்திற்கு அபிவிருத்தி தொடர்பான சில முடிவுகளை தரலாமென விரும்புகின்றேன்.

### 1.வீதியும் போக்குவரத்தும்

பருத்துறையிலிருந்து கொடிகாமத்தில் கண்டி வீதியுடன் இணையும் துறைமுக வீதியானது வரணியூடாகவே செல்கின்றது. இது வடமராட்சிக்கும், வரணிக்கும், வன்னிக்கும், ஏனைய இந்தப் பிரதேச மக்களுக்கும் பிரதான நுழைவு வழிப் பாதையாகும்.

இந்தப்பாதையானது பல இடங்களில் பாதிப்படைந்து காணப்படுவதோடு, பிரதான பாலமான முள்ளிப் பாலம் சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. இவற்றினை மீளமைத்து போக்குவரத்தினை சீர்ப்படுத்தல் வேண்டும் என்பதோடு, இந்தப் பாதையானது வாகன நெரிசல் மிகுநதமையால், அகலமாக்கப்படுதலும் நன்றாகும். இதன் மூலம் விபத்துககளைத் தவிர்க்கலாம். இவற்றினைவிட பல உள்ளக வீதிகள் இராணுவத்தால் தடை செய்யப்பட்டு, இப்பொழுது திறந்து விடப்பட்டுள்ளது.இவற்றில் இன்றும் திறக்கப்படாத வீதியாக வாழைத்தோட்டம் மாசேரிவீதி காணப்படுகின்றது.

**கிராம அபிவிருத்தி என்னும் பெயரில் செல்வாக்கு அரசியலை பயன்படுத்துவது, ஏனைய பிரதேச மக்களின் அபிவிருத்தி ஜனநாயகத்தினை சுரண்டுவதற்கு ஒப்பானதாகும்.**

இந்த வீதியானது மிதிவெடி அபாயம் காணப்படுவதோடு புதர்கள் மண்டியுள்ளது. இந்தப் பாதை மூடப்பட்டுள்ளதால், இதன் வழியே உள்ள பெருந்தொகையான தோட்ட நிலமும், வயல் நிலமும் செய்கை பண்ணப்படாது, அபிவிருத்தியை மநதப்படுத்துகின்றன. இவற்றைவிட இந்த வழியேயுள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றும் மூடப்பட்டுள்ளது. இவற்றினை இனங்கண்டு அபிவிருத்திசெய்தலே சிறந்ததாகும்.

போக்குவரத்தினை எடுத்துக் கொண்டால், இந்தப் பாதையூடாக அரச பேரூந்துகளே பெருமளவில் பயணம் செய்கின்றன. ஆனால், இவை ஒழுங்கீனமாகவே செயற்படுகின்றன. இதனால், மக்கள் தட்டி வான் சேவையை நாடவேண்டியுள்ளது. தட்டிவான் சேவையானது அசௌகரியமானதும், ஆபத்து நிறைந்ததுமாகும். இவை அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிக் கொண்டு அடிக்கடி தடம் புரளுகின்றன. எனவே, இதற்கான மாற்று ஏற்பாடுகளும் கவனிக்கப்பட வேண்டிய தொன்றாகும்.

### 2. மருத்துவமனையும் குறைபாடுகளும்.

வரணியின் பரந்ததொரு பிரதேசத்துக்கு சிறியதொரு மருத்துவமனையே உள்ளது. இது ஓர் மகப்பேற்றுமனையாகும். இங்கு நோயாளர தங்கி நின்று வைத்தியம் செய்ய விடுதி வசதிகளோ, இரவு நேர வைததியர்களோ இல்லை. திடீர் நோயாளிகளை ஏற்றிச் செல்வதற்கான அன்புலன்ஸ் வசதிகளும் இல்லை.

இந்தப்பகுதி நோயாளர்கள் தமது சிகிச்சைக்காக 15 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள சாவகச்சேரி மருத்துவமனையையோ அல்லது மந்திகை மருத்துவமனையையோ தான் நாட வேண்டியுள்ளது. இது பெரும் உயிர்ச் சேதங்களையும் மனஉளைச்சல்களையும் மனதில் உண்டு பண்ணி விடுகின்றது. இதனால், பொருளாதாரப்பற்றாக்குறைக்குள்ளான குடும்பங்கள் மருத்துவ வசதி பெறுவதில் பெரும் அவஸ்தைக்குள்ளாகின்றனர்.

### 3. பாடசாலையும், கல்வி அபிவிருத்தியும்.

எட்டுக் கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்ட வரணியில் ஒரே ஒருஉயர்தரப்பாடசாலை மட்டுமேயுள்ளது. இங்கும் ஒரே ஒரு துறை (கலை) மாத்திரமே உள்ளது. இதனால் பொறியில், மருத்துவம், வணிகம், சம்பந்தமான துறைகளில் கல்வி கற்க மாணவர்கள் நகரப் பாடசாலைகளை நோக்கி நகர வேண்டியுள்ளது. இதனால், பல கிலோமீற்றர் பயணம் செய்து பல்லாயிரம்ரூபா செலவு செய்தே படிக்கமுடியும்.

இந்த நிலமையானது ஏழைப் பெற்றோர்களின் பிள்ளைகளுக்கு ஏட்டாக் கனியாகவேயுள்ளது' அவரகளுக்குத் திறமை இருந்தும், வெளிக்காட்ட களம் இல்லாது போவதால் அவர் களது திறமை மழுங்கடிககப்படு கின்றது இதனால், பல பொறியியலாளர்களையும், மருத்துவர்களையும் வரணிமண் இழக்க நேரிடுகின்றது. எனவே, இந்தப் பாடசாலையை சகல வளங்கள் கொண்டதாகவும், சகல துறைகளை உள்ளடக்கியும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

### 4. கைத்தொழிலும் வருமானமும்.

இந்தப் பிரதேசத்தில் பல ஆண்டுகளாக இயக்கப்படாத ஒரு நெசவாலை காணப்படுகின்றது. இதை மீள இயக்குவதால், பல தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பெற முடியும. இதேபோன்றே பனை வெல்ல உறபத்தி நிலையம் ஒன்றும் சீரான நடவடிக்கைகள் அற்றுக் காணப்படுகின்றது. இதனை நிர்வாக சீரமைப்பு செயவதன் மூலம், பனைவளம் அதிகமுள்ள இந்தப் பிரதேசத்தில் இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய முடியும். அத்தோடு, அற்ககோல் வடிசாலை ஒன்றும் பராமரிப்பு அற்று சீரழிகின்றது. இதனை மீள் பராமரிப்புக்கு உட்படுத்துவதன் மூலம் பல இலட்சம் வருவாயினைப் பெற்றுக் கொள்ள முடிவதோடு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினையும் விரிவாக்கலாம்.

### 5. நீர்ப்பாசனமும் புனரமைப்பும்.

கடந்த காலங்களில் அரச சார்பற்ற நிறுவனங்களால் குளங்களும், வடிகால்களும் புனரமைக்கப்பட்ட போதும் அவை சிறந்த செயற்திறன் அற்றவையாக இருப்பதோடு, பெருமளவு பணத்தினை தேவையற்று ஏப்பம் விட்ட செயற்திட்டங்களாகவே காணப்படுகின்றன. இதன் காரணமாக நன்நீராகிய மழைநீர் வீணே வழிந்தோடி, உவர் நீராகிய கடல் நீருடன் கலந்து விடுகின்றன. இவை சிறந்த பொறியியல் திட்டங்கள் மூலம் வடிவமைக்கப்படின் பயனுள்ள பல விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு, உணவு உற்பத்தியில் இந்தப் பிரதேச அபிவிருத்தி மட்டத்தினை உயர்த்தலாம்.

### 6. விளையாட்டுக் கழகங்களும் மைதானமும்.

இந்தப் பிரதேசத்தல் பல்வேறு விளையாட்டுக் கழகங்களும், சிறந்த வீரகளும் காணப்படுகின்றனர். எனினும், பரந்த வசதியுள்ள பொது மைதானமும், பார்வையாளர் அரங்கும் இலலாமை பெருங்குறைபாடாகும்.

இந்தப் பிரதேச விளையாட்டு வீரர்கள் மாவட்ட தேசிய ரீதியான விருதுகளை வென்றுள்ளபோதும், அவர்கள் தம் சொந்தப் பிரதேசத்தில் பயிற்சிபெற ஒரு பொது மைதானம் இலலாதது பெருங்குறைபாடேயாகும். ஆனால், படைவீரர்களோ தனியார் நிலங்களை ஒன்றினைத்து தமது விளையாட்டு நிலையினை மேம்படுத்திக் கொள்கின்றனர்.

### 7. தபால் சேவையும் பொதுவசதிகளும்.

அறுபது உபபிரிவுகளைக் கொண்ட இந்தப் பிரதேசத்திற்கு ஒரே ஒரு உபதபால் நிலையம் மட்டுமே காணப்படுகின்றது. இதனால், விநியோகச் சீரின்மையும், தாமதமும் ஏற்படுகின்றன. அத்தோடு, இங்கே தொலைபேசி, தொலைநகல இணைய வசதிகள் இல்லை, இத்தகைய சேவையைப் பெற 10 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள கொடிகாமம் தபால் நிலையத்தையோ அல்லது நெல்லியடி தபால் நிலையத்தையோ, மக்கள் நாடவேண்டியுள்ளது. எனவே இதனை தபாலகமாக தரம் உயர்த்தி இத்தகைய வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது நன்றாகும்.

### 8. வங்கியும் சந்தை வாய்ப்பும்.

இந்தப் பகுதி மக்களுக்கு பணக் கொடுக்கல், வாங்கல்களை மேற்கொள்ள வங்கிகளோ அல்லது நிதி சார்ந்த எந்த நிறுவனங்களோ இல்லை. இதனால் கடன் பெற, அல்லது சேமிபபுச் செய்ய நீண்டதூரம் சாவகச்சேரி அலலது நெல்லியடிக்குச் செல்ல வேணடியுள்ளது.

இந்தப் பிரதேசத்துக்கு ஒரே ஒரு சந்தை மட்டுமே உள்ளது. ஆனால் அது போதிய இட வசதியையோ அல்லது படி கட்டட அமைப்புக்களையோ கொண்டிருக்காத நெருக்கடி மிகுந்த ஓர் அமைப்பு முறையாகும். இதன் இடவமைவு மாற்றப்பட்டு அபிவிருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

### 9. ஊட்டமும் போசாக்கும்

இந்தப பிராந்தியத்தில் பல பிரதேசஙகளின் வாழ்க்கைத்தரங்கள் மிகவும் தாழ்வு மட்டத்தில் இருப்தோடு, குழந்தைகள் மட்டத்தில் போதிய ஊட்டமின்மை காணப்படுகின்றது. அத்தோடு, இங்கு கல்வி அறிவு குறைவாக இருப்பதோடு, சிறு வயதுத் திருமணங்களும் அதிகமாக உள்ளன. இவை அபிவிருத்தி முன்னேற்றத்துக்கு தடையாக அமைவதால், இந்த நிலைமை முன்னேற்றப்பட வேண்டும். உதாரணமாக - கறுக்காய், காட்டுப்புலம், முத்தட்டு போன்ற பிரதேசங்களை இனங்காணலாம்.


### 10. உதவிகளும் முன்னேற்றங்களும்.

இங்கு பல்வேறுபட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் பல வகைப்பட்ட உதவிகளைச்செய்கின்ற போதும், சரியான திட்டமிடல் இன்மையால், கொடுப்பனவுகள் தவறான வழிக்குச் செல்கின்றன. இவை மோசடிகளில் ஈடுபடும் நிறுவனங்களுக்கு தமது செயற்பாட்டை இலகுபடுத்த சாதகமாக அமைவதால் இந்தப் பிரதேசங்களை கொடுப்பனவுக்குரிய 'கவர்ச்சியான' பிரதேசங்களாக தெரிவு செய்கின்றன. இவை சம்பந்தப்பட்டவர்களால் கண்காணிக்கப்படுதல் வேண்டும்.இப்படிப்பட்ட பல்வேறு துறைகளில் பல்வேறு மட்ட அபிவிருத்தி நிலைகள் காணப்படுவதால், அதற்குரியவர்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டியது அவசிய மாகும்.

*

மருத்துவக் கட்டுரை

குருபரன்



# உடலிலுள்ள சகலதொகுதிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை

தென்னையில் தேள் கொட்ட பனையில் நெறி கட்டியமாதிரி என பது தமிழில் வழங்கப்படும் தொடர். அதாவது, சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் நிகழ்வுகள் நிகழ்வதை குறிக்க இது பயன்பட்டது. ஆனால, மருத்துவத்தைப் பொறுத்த வரை இதற்கு நிறையவே விதிவிலக குகள் உண்டு. நெஞ்சு நோகுது என்று வைத்தியரிடம் போக அவரே கையைப் பிடித்துப் பார்க்கின்றார் என்று நீங்களும் அங்கலாத்திருக்கக் கூடும். ஆனால், இவையெல்லாம் காரணகாரியம் மிக்கவை.

நமது உடலின் சகல தொகுதிகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. ஒரு பகுதியில் ஏற்படும் பாதிப்பு இன்னொரு பகுதியில் விளைவாகக் காட்டப்படலாம். அதுவும் சுற்றோட்டத் தொகுதி, சுவாசத் தொகுதி போன்ற உடலின் மிக முக்கிய பகுதிகள் பாதிக்கப்படும் போது, உடல் முழுவதும் அதற்குரிய குணம், குறிகளை காட்டும். இதற் காகவே, ஒரு நோயக்காக வைததியரிடம் செலலும் போது அவர் உடல முழுவதையும் பரிசோதிக்கும் கடப்பாட்டில் உள்ளார்.

### நெஞ்சுவலி

நெஞ்சுவலி பல்வேறு காரணங்களால் ஏற்படலாம். ஆனாலும், வலியின் தன்மையை கொண்டு அந்த நோ இதயத்தில் ஏற்படும் கோளாறா, இல்லையா என்று கண்டுபிடிக்கும் திறமை வைத்தியர்களுக்கு உண்டு. ஆனால், நெஞ்சுவலி இல்லாமல் தனியே தோட்பட்டை எலும்பு நோவாகவோ அல்லது பல்வலியாகவோ இதயநோய் வெளிக்காட்டப்படலாம். எனவே, பல்லில் ஒரு குறைபாடு இல்லாத நிலையில் பல்வலிக்கிறது என்றால், அடுத்ததாகப் பார்க்கப்படவேண்டிய இடம் இதயந்தான். இதையெல்லாம் தாண்டி நோவே இல்லாமல் கூட மாரடைப்பு (இதய நோ) ஏற்படலாம். நீண்டகாலம் நீரிழிவு நோயால் பீடிக்கப்பட்டவர்கள் இவ்வாறான நோவற்ற மாரடைப்பை பெறும் வாய்ப்பு நிறையவே கொண்டவர்கள். இது நிசப்த மாரடைப்பு (Silent mI) எனப்படும்.

### நீலம் பாரித்தல்

உடல் இழையங்களுக்கு வழங்கப்படும் ஒட்சிசன் குறையும் போது அது சிவப்பு குறைந்த (சற்றே நீல நிறமான) இரத்தமாக மாறுவதால், நாக்கு, கைவிரல்கள் போன்ற பகுதிகள் நீலநிறமாக மாறக்கூடும் இப்படியானவர்களது சுவாசச் சுற்றோட்ட தொகுதிகள். உடனடியாக பரிசோதிககப்பட்டு, ஒட்சிசன் சுவாசம் வழங்கப்படும்.

### நிணநீர் முடிச்சுக்கள்

சாதாரண நிலையில் பொதுவாக நிணநீர் கணுக்கள் கையால் தொட்டுணரப்பட முடியாதவை. இவற்றில் மாற்றம ஏற்படும் போது, தொட்டுரணபபடக் கூடிய தன்மையை பெறும். உதாரணமாக - வயிற்றுப் பகுதியில் புற்றுநோய்க்கட்டிகள் ஏற்பட்டால் சிறுசாலி என்புக்கருகில் (Colla Bme) உள்ள நிணநீர்க்கணுக்கள வீங்கும். அதே போலத்தான் காலல் மாறாத புண்கள் உள்ள போது அரைகளுக்கிடையிளுள்ள கணுககள் வீங்கக்கூடும்.

### சிறுநீரகக் கோளாறுகள்.

உமது உடலின் நீரையும்,கழிவுகளையும் வெளியேற்றும் அங்கங்களில் ஒன்று சிறுநீரகம். இதனால், சிறுநீரகம் பழுதடையும் போது உடல் வீக்கமுறுகிறது. இந்த வீக்கமான இடஙகளில் அழுத்தும்போது, அங்கு குழிவிழும் தவிர, சிறுநீரக கோளாறுகளில் நோ ஏற்படும்போது அது சள்ளையிலிருந்து அரைப்பகுதியை நோக்கிப் போகும் நோவாக அமையும்.

### பார்வையும் பிட்யூட்டறியும்.

பார்வைக் கோளாறுகளுக்கு கண் பாதிப்பு, கண்ணின் நரம்பு பாதிப்பு, பார்வையை அறியும் பின் மூளையில் ஏற்படும் பாதிப்புக்கள் காரணங்களாகும். இதில் பார்வை நரம்புகள் சந்தித்துப் பிரியும் இடத்தில் தான், இந்த பிட்யூட்டறி எனும் கபச்சுரப்பி உள்ளது. இதற்கும் பார்வைக்கும் எந்தவித நேரடிச் சம்பந்தமும் இல்லை. ஆனாலும் இச் சுரப்பி வீங்கி பார்வை நரம்பை அழுத்தினால், இரு புறமும் அரை வாசிப்பார்வை போய்விடும்

இவ்வாறு, நிறைய உதாரணங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்று உள்ளது போல் வெளித்தெரிந்தாலும், உணமையில் அவைதமக்குள் தொடர்பு கொண்ட பிரதிபலிப்பாகவே உள்ளன. இனிச் சொல்லுங்கள், "மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடுபவன், முழு விசரன் இல்லைத்தானே?!"

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.

**சிந்தனைக்கு**

குடிபுறங் காத்துஓம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்

திருக்குறள்

# நமது நோக்கு

## அரசுக்குள்ள முக்கிய கடமை

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான பதிவுகள் முடிவடைந்து, இப்போது நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

புதிதாகப் பதவியேற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் தேர்தல் வாக்குறுதியாக நாடுமுழுவதும் உள்ள 27 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப் போவதாக அறிவித்திருந்தது.

ஆட்சியைப் பிடித்ததும் தனது முதல் வாக்குறுதியை நிறைவேற்றப் போவதாகக் கூறிக்கொண்டு அரசாங்கம் பட்டதாரிகளுக்கான வேலைவாய்ப்புக்குரிய பதிவுகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

அரசாங்கம் 27 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப் போவதாக அறிவித்திருந்தும்- இப்போது வேலைவாய்ப்புக்குப் பதிவு செய்த பட்டதாரிகளின் எண்ணிக்கை சுமார் 53 ஆயிரத்தை எட்டியிருக்கிறது.

அரசாங்கம் வேலைவாய்ப்புக் கொடுக்கத் திட்டமிட்ட தொகையிலும் இரட்டிப்பு மடங்கானோர் பதிவுகளைச் செய்திருப்பது நாட்டில் வேலையின்மை எந்தளவுக்கு மோசமான கட்டத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்ற உண்மையைத் தெளிவுபடுத்தியுள்ளது.

நாடு முழுவதும் 53 ஆயிரம் பட்டதாரிகள் மட்டும் வேலைவாய்ப்புக்கள் இன்றி இருக்கிறார்கள் என்றால், ஏனைய கல்வித் தகமைகளுடன் வேலையற்று இருப்போர்களின் எண்ணிக்கை பலஇலட்சங்களைத் தொடும் என்பதில் சந்தேகமில்லை.

பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரிப்பது நாட்டின் கல்வித் திறன் வளர்ச்சிக்கு அவசியமானது. அதேவேளை பட்டதாரிகள் அனைவரும் அரசாங்கத்திடம் இருந்து வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்பதும் தவறான கருதுகோளாகவே இருக்கும்.

இப்போது அரசாங்கம் பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்து அரசாங்க வேலைகளில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருப்பது, தமது அரசியல் இலாபத்தினைக் கொண்ட தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்றும் நோக்கிலேயாகும்.

ஒரேயடியாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும் 27 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரசாங்கம் எந்தெந்தத் துறைகளில் வேலைவாய்ப்பை வழங்கப்போகிறது?

அரசாங்க சேவையில் மட்டுப்படுத்தப்பட்ட வெற்றிடங்களே இருக்கும் நிலையில் அரசாங்கம் அனைவரையும் வேலையில் ஈடுபடுத்துவதென்பது இலகுவான காரியமாக இருக்காது.

இதனால் தான் இரண்டுவருடகாலப் பயிற்சி என்றும் அதற்கு மாதாந்தம் ஆறாயிரம் ரூபா கொடுப்பனவு என்றும் திட்டங்களை அரசாங்கம் வைத்திருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பட்டதாரிகளுக்குப் பொருத்தமான வேலைவாய்ப்பு வழங்கப்படுவதில்லை என்ற குறைபாடு நீண்டகாலமாகவே இருந்து வருகிறது.

வியாபார முகாமைத்துவப் பட்டதாரிக்கும்சரி, கலைப்பட்டதாரிக்கும்சரி, விஞ்ஞானப்பட்டதாரிக்கும்சரி ஆசிரிய சேவைதான் என்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. வெவ்வேறு துறைசார் கல்வியைக் கற்று முடித்தவர்கள் அவர்களின் கல்வியுடன் சற்றும் பொருத்தமில்லாத துறையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றமை தொடர்ந்தும் நீடிக்கின்றது.

இப்போதும் கூட அரசாங்கம், அரச சேவையிலுள்ள வெற்றிடங்கள் எத்தனை என்றுதான் பார்க்கிறதே தவிர இந்த வேலைவாய்ப்புக்கள் பட்டதாரிகளின் கல்வித் தகமைகளுக்குப் பொருத்தமானதுதானா என்று யோசித்ததாகத் தெரியவில்லை.

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை அரசாங்கம் வழங்க முற்படுகின்ற போது இன்னொரு புறத்தில் பல்கலைக்கழக வாய்ப்புக்களை இழந்த இலட்சக்கணக்கானோரில் குறிப்பிட்டளவானோருக்கும் வேலைவாய்ப்புக்களை வழங்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது.


பல முறைகளிலும் அரசாங்கம் அரச வேலைவாய்ப்பில் நெருக்கடிகளைச் சந்திக்கக் கூடிய நிலைதான் தென்படுகிறது. காரணம் இப்போது அரசாங்கம் பாரிய நிதிநெருக்கடிக்குள் சிக்கிப் போயிருக்கிறது.

இப்படியான சூழ்நிலையில் பெரும் எண்ணிக்கையானோருக்கு வேலைவாய்ப்பை வழங்குவது பிரச்சினைக்குரிய ஒன்றாக இருக்கலாம். வேலையற்று இருக்கும் பட்டதாரிகள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் அரசாங்கம் புதிய நம்பிக்கை ஒன்றைத் தோற்றுவித்து இருக்கின்றது.

அரசாங்கம் வேலைவாய்ப்பை வழங்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பில் - ஆயிரக்கணக்கானோர் நினைத்திருக்கும் நிலையில் இந்த ஆட்சேர்ப்பில் எந்த முறைகேடுகளும், அரசியல் தலையீடுகளும் இல்லாமல் பார்க்கப்படவேண்டியது அவசியமாகும்.

பல்வேறு நடைமுறைச்சிக்கல்களை ஆட்சேர்ப்பின் மூலம் அரசு எதிர்கொண்டிருப்பது ஒரு புறமிருக்க - வேலைவாய்ப்புக்களை அரசு, தனியார் துறைகளில் பெருக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருக்கிறது என்ற உண்மை நிலையை மறக்காமல் இருப்பது அரசுக்கு நல்லது.

# நாடும் நடப்பும்




# இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை சுதந்திர முன்னணியுடன் இணைக்க முயற்சி

## மங்கள சமரவீர வேண்டுகோள்விடுப்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை - ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைக்கும் முயற்சிகளில் அரசாங்கம் தொடர்ந்தும் முனைப்புடன் செயற்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பான முயற்சிகளில் ஈடுபட்டுவந்த சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் மங்கள சமரவீர, நேற்று முன்தினம் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமானுடன் நீண்டநேரம் தொலைபேசியில் பேசியதாகவும், இந்தப் பேச்சுக்களின்போது, அரசுடன் இணைவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விதித்துவரும் முன் நிபந்தனைகளைத் தளர்த்துமாறும், அமைச்சர் மங்கள சமரவீர வேணடுகோள் விடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு ஆகியன தமக்கு வழங்கப்படவேண்டும் என்ற இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் நிபந்தனையே இணைப்புக்குத் தடையாகவுள்ளதால், இந்த நிபந்தனைகளைத் தளர்த்துமாறு அமைச்சர் மங்கள சமரவீர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனையடுத்து, எதிர்வரும் மாகாணசபைத் தேர்தல்கள் முடிவடைந்ததும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அரசுடன் இணைந்துகொள்ளும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டாரங்கள நம்பிக்கை வெளியிட்டுள்ளதாகவும், தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை அரசுடன் இணைத்துக்கொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் ஜே.வி.பி - இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்பட்டால், அமைச்சரவையை விரிவாக்கவேண்டிய நிலை ஏற்படுமென்றும் அரசை எச்சரித்திருக்கிறது.

இதேவேளை, அரசுடன் இணையும் எண்ணம் தமக்குக் கிடையாது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடன் துரிதப்படுத்தவும்

## அரச அதிபர் கோரிக்கை

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு, யாழ்.அரசஅதிபர் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களுக்குக் கடிதமனுப்பியுள்ளார்.

அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

யாழ்.செயலகத்தில் கடந்த முதலாம் திகதி அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி யாழ்.மாவட்டத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த அந்தப்பிரதேச செயலகங்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்தல் அவசியம்.

உடனடியாக அந்தப் பிரதேசசெயலகங்களில் உள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் கிராமசேவையாளர்களை அழைத்து குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்துவதுடன், நல்லிணக்கக் குழுக்களையும் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்கான பணிகளை சிறப்பாக முன்னெடுப்பதற்கு கிராமசேவையாளர் பிரிவுகளினூடாக விழிப்புக்குழுக்களை, சமூக முன்னேற்றத்தில் அக்கறை உள்ளவர்களைக்கொண்டு நிறுவுதல்வேண்டும்.

இந்தத் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுவதனூடாக சமூகச்சீர்கேடுகள், குற்றச்செயல்கள் முதலானவற்றைக் கட் டுப்படுத்தமுடியும் என்பதால், இந்த நடைமுறை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுதல் வேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் வலியுறுத்தித் தெரிவிக்கப்பட்டது. (ப)

# புதிய அரசின் பொருளாதாரக்கொள்கை இந்த மாதம் ஆரம்பிக்கத்திட்டம்!

புதிய அரசின் பொருளாதாரக்கொள்கை இந்தமாதம் ஆரம்பிக்கத் திட்டமிட்டு தயார்ப்படுத்தலில் ஈடுபட்டுள்ளதாக, நிதித்துறை அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்தார்.

தெளிவான பொருளாதாரக் கொள்கையை அறிவித்தாலேயே அபிவிருத்திக்கான கடன்களை வழங்கமுடியும் என உலகவங்கி அறிவித்துள்ளது.

இந்தநிலையில், பொருளாதாரக்கொள்கையை அறிவிப்பதற்கான ஏற்பாட்டில் சரத் அமுனுகம துரிதமாக ஈடுபட்டுள்ளார்.

6 சிங்கள மாவட்டங்களில் அபிவிருத்திக்கு 90 மில்லியன் டொலர்களை வழங்க உலகவங்கி இணங்கியிருந்தது. இதனை தருவதற்கு தெளிவான பொருளாதாரக் கொள்கையை அது வேண்டிநின்றது.

ரணில் அரசுக்கு முன்னதாக சந்திரிகாவின் ஆட்சியில் 2002 ஆம் ஆண்டிற்கு முன் ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு வங்கி வாக்களித்த 500 கோடிரூபா இப்பொழுதே தரப்பட்டுள்ளது. இது பழையதிட்டமான கண்டி குடிநீர் வழங்கலுக்கானதாகும்.

உலகவங்கி தமிழர் தாயகப்பகுதி புனர்வாழ்வுக்கு 30 மில்லியன் டொலர்களை வழங்க இணங்கியிருக்கிறது என்று, உலகவங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர்ஹரோல்ட் தெரிவித்ததாக, அவர் மேலும் தெரிவித்தார்.

# 435 கிராம அலுவலர் பிரிவுகளில் 358 பேரே பணியாற்றுகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 435 கிராமசேவையாளர் பிரிவுகளில் 358 கிராம அலுவலர்களே பணியாற்றி வருகின்றனர்.

யாழ்.மாவட்டத்தில் நீண்ட காலமாகவே கிராம அலுவலர் பணிக்கான வெற்றிடங்கள் நிலவிவருகின்றபோதிலும், இதுவரையில் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மிக நீண்டகாலமாகவே இந்த 77 கிராமசேவையாளருக்கான வெற்றிடங்கள் நிலவிவருகின்றபோதிலும்,அவை நிரப்புவது தொடர்பான நடவடிக்கைகள் அரசால் இன்னமும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போது கிராமசேவையாளராக பணியாற்றுபவர்களில் பலர் சிறிது காலத்தில் ஓய்வுபெறவிருப்பதால் அவர்களின் இடத்தை நிரப்பவேண்டிய கட்டாயதேவையும் உள்ளது.

இதனைவிட ஓய்வுபெற்ற 30 கிராம அலுவலர்களுக்கு சேவைக்கால நீடிப்பு வழங்கப்பட்டு பணியாற்ற அனுமதிக்கப்பட்டிருந்தபோதிலும் அவர்களின் பணிநீடிப்பும் இந்தவருடம் முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது இந்த கிராமசேவையாளர் பணிநிலைவெற்றிடம் பிரதேச செயலகங்களுக்கும் பெரும் பிரச்சினையாக மாறிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

செய்திக் கட்டுரை

கண்ணன்

# அடிப்படை வசதிகளுக்காக போராடும் நெடுந்தீவு மக்கள்

யாழ். மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் இருந்து நீண்டதூர கடற்பயணத்தின் பின்னர் சென்று தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய மக்களைக் கொண்ட ஒரு பிரதேசமாக நெடுந்தீவு விளங்குவதனால், அதனை தனியான ஒரு உதவி அரசாங்க அதிபர் பிரிவாகக் கொண்டுள்ளதுடன், தனியான பிரதேச சபை, தபாலகம், மாவட்ட வைத்தியசாலை, கல்விக்கோட்டம் என அனைத்து துறைகளுக்கும் தனித்தனி நிர்வாகக் கட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. பிரதேச ரீதியாக சில வேலைத்திட்டங்கள், அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றபோது ஏனைய பிரதேசங்களைப் போன்று இங்கும் அவை முன்னெடுக்கப்படுகின்றது. இந்த வகையிலே சில நன்மைகள் நெடுந்தீவு வாழ் மக்களுக்கு கிடைக்கின்றபோதும் அவற்றை செயற்படுத்தக் கூடியளவுக்கு நெடுந்தீவில் உள்ள திணைக்களத் தலைவாகளுக்கு யாழ். மாவட்டத்திலுள்ள திணைககளங்கள், சபைகள் என்பவற்றின் ஒத்துழைப்புக்கள் உடனடியாகவோ, அன்றி பூரணமாகவோ கிடைக்காமல் போகும் நிலைமைகள் உள்ளதால் தீவின் வளர்ச்சிப் போக்கில் பெரும் வீழ்ச்சி நிலை தொடர்ந்து செல்கின்றது.

இந்த வகையில் நெடுந்தீவு மக்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம், கல்வித் திணைக்களம், தபால் திணைக்களம், வடபிராந்தியப் போக்குவரத்து சபை. என பல்வேறு பட்ட திணைக்களங்களினது சேவைகள், செயற்பாடுகள் என்றுமே அவசியமாகவுள்ளமை இங்கு குறிப்பிடத தக்கதாகும்.கடந்த சில காலமாக நெடுந்தீவுப் பிரதேசத்தின் சில வேலைத்திட்டங்களும், சேவைகளும் பின்னடிக்கப்பட்டுக் கொண்டு செல்லும் நிலைமையே தொடர்ந்து செல்கின்றது. இந்த வரிசையிலே -

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

நெடுந்தீவுக்கும் வெளியிடங்களுக்குமான ஒரேயொரு தொடர்பூடகமான கடற் போக்குவரததினைப் பொறுப்பேற்று செவ்வனே நடத்த வேண்டியதொரு முக்கிய பணியினை ஆற்ற வேண்டிய சபை, இவர்கள் தங்களது பணியினை கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் பல படகுகளை சேவையில் ஈடுபடுத்தி அளப்பரிய சேவையாற்றினர். நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக படகுகளை இழந்து, இன்று குமுதி னிப்படகு சேவையும், வீதி அபிவிருத்தி அதி கார சபையினரும் தொடர்பாக செய்திக் கட்டுரைகளில் அடிக்கடி விமர்சிப்பதனால் விரிவான விளக்கம் தேவையில்லை.

கடந்த பல மாதமாக திருத்த வேலை காரணமாக சேவையிலீடுபடாத குமுதினிப் படகு இந்த மாதத்தில் (ஆனி) சேவையில் ஈடுபடும் சாத்தியக் கூறுகள் உள்ளது. இது படகு சேவையில் வந்ததும் நெடுந்தீவு மக்களின் கடற் போக்குவரத்து சீராகியது என்று சிவனே என இருந்து விடுவார்கள். ஆனால், 25 வருடத்துக்கும் மேலான சேவையில் உள்ள இப்படகு எப்போது இடைக் கடலிலே செயலிழந்து நிற்கும் என்பது தெரியாத விடயமல்ல. எனவே நெடுந்தீவு மக்களின் முக்கியமான கடற்போக்குவரத்துக்கு புதியதொரு படகினையும் பெற்று சேவையிலீடுபடுத்த திணைககளங்களுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களுக்கு இப்போதுள்ள ஆதங்கம்.

### வீதி அபிவிருத்தித் திணைக்களம்

நெடுந்தீவினது பிரதான வீதிகள் பல வருடகாலமாக திருத்தப்படாமல் இருந்து மக்கள் பெரும் துயரங்களுடன் பயணம் செய்தமையும், இப்போதும் சில பகுதி வீதிகள் மககள் பாவனைக்கு உகந்ததாக இல்லாமையினாலும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்த வகையில் ஒவ்வொரு ஆண்டும் வீதி திருத்தத்திற்கு என ஒவ்வொரு நிதி ஒதுக்கீடுகள் மூலம் நிதி கிடைத்து இத் திணைக்களத்தினரின் உதவியுடனேயே வேலைகள் நடைபெற்று வருகின்றது.

ஆனால் கடந்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் மூலம் நெடுந்தீவு மேற்கு பிரதான வீதியின் 300 மீற்றர் நீளமான பகுதி திருத்தத்திற்கு நிதி கிடைத்த போதும் அதற்கென இன்று வரைக்கும் எந்தவிதமான செயற்திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை. இந்த நிலையினால் எதிர்வரும் காலங்களில் எமது தீவுக்கு கிடைக்கும் அபிவிருத்தி நிதிகள் ஒதுக்கப்படாது கூடவிடலாம்.

நெடுந்தீவு மேற்கு பிரதான வீதியின் ஒரு பகுதி குன்றும் குழியுமாக உள்ளது. இதனை யாவது இத் திணைக்களத்தினர் தற்காலிகமாக செபபனிட்டு சீரான போககுவரத்துக்கு வழி சமைக்கலாமே என மக்கள் மத்தியிலே ஒரு அங்கலாய்ப்பு.

### இலங்கை மின்சார சபை

நெடுந்தீவின் பிரதான வீதியில் மாவிலித் துறைமுகம் தொடக்கம் சீக்கிரியாம்பள்ளம் பகுதி வரைக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டு வீதியோர வீடுகளுக்கு மின்சாரத்தை வழங்கியதுடன் தஙகள் சேவை நிறைவுற்றதாக பெருமூச்சு விட்டுக் கொண்டு இருப்போர் இவர்களுக்கெங்கே மக்களது அங்கலாய்ப்பு தெரியப்போகிறது.

250 கி.வா அளவு கொண்ட இயந்திரம் சுமார் 50 வீடுகளுக்கு மின் இணைப்பை வழங்கி விட்டு சேவையிலுள்ளது. மேலும் விஸ்தரிக்கும் நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்த வகையிலே நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின் விநியோகத்திற்கென 10 இலட்சம் ரூபா கடந்த வருடம் ஒதுக்கப்பட்டும், அதற்கான வேலைகள் இன்றுவரைக்கும் ஆரம்பிக்கப்படவில்லை. அங்கே புதிய மின் நிலையம் அமைக்கக் கூடிய இடம் ஒதுக்கப்பட்டதுடன், முன்னர் கிராமிய மின் வழங்கலுக்கு பயன்படுத்திய மின் இயந்திரத்தை அங்கே பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், பணிகள் நின்று போயுள்ளது. திணைக்களங்களுக்குள்ளே கடிதம் மூலம் மட்டும் வேலைகள் இடம்பெறுவதாக தெரிகின்றது.

இது இவ்வாறிருக்க இவ்வருடம் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சித்திணைக்களததினரால் கிராமிய மின் விநியோகத்திற்கென, நெடுந்தீவு மத்திரகிழக்குப் பகுதி மின்சார விஸ்தரிப்புக்காக ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதற்கான மதிப்பீட்டறிக்கைகள் தருமாறு நெடுந்தீவு பிரதேச சபையினரால் கோரப்பட்ட போதும், இன்றுவரை கிடைக்கவில்லை எனத் தெரியவருவதுடன் தற்போது மின்நிலையம் உள்ள கட்டடம் பிரதேச சபைக்கு சொந்தமானதாகையால், மின்சார சபையினர் தமக்கென தகுந்த ஒரு இடம் கிடைக்கும் வரைக்கும் எந்தவிதமான விஸ்தரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ளதாக நெடுந்தீவு பிரதேச சபைக்கு அறிவித்துள்ளதாக பிரதேசசபை வட்டாரங்கள் தெரிவித்தன. இதேவேளை இதுவரைக்கும் இந்நிதிக்கான மதிப்பீட்டறிக்கை கிடைக்காமையால் கட்டுநிதி பெறுவதில் தாமதம் ஏற்படுவதாக உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளமையும் குறிப்பிடததக்கது.

நிதி ஒதுக்கீடுகள் கிடைத்த போதும் ஒரு பகுதி மக்கள் மின்னொளியிலும், ஒரு பகுதி மக்கள் குப்பி விளக்கிலும் காலத்தை ஓட்டுவது குறித்து யாருக்கும் கவலையில்லை. தங்கள் உள்ளக் குமுறல்களை உரியவர்களே தங்கள் உள்ளங்களுக்குள் அடக்கியுள்ளனர்.

### சுகாதாரத் திணைக்களம்

மாவட்ட வைத்தியசாலை என்ற பெயரில் நெடுந்தீவில் இயங்கிவரும் வைத்தியசாலை ஒரு கிராமிய வைத்தியசாலைக்குரிய ஆளணியோ, பௌதிக வளங்களோ இன்றியே இயங்கிவருகின்றது.

இதிலும் முக்கியமாக மருந்துகள் உரிய காலப்பகுதிக்கு மட்டுமே அனுப்பப்பட்டு வருவதனால், இவ்வாறு அனுப்பப்படும் மருந்துகள் இயற்கை மாற்றம் மூலம் ஏற்படும் நோய்களால் விரைவில் முடிந்து விட்டால் அவற்றை மீள எடுப்பதற்கு விண்ணப்பித்தாலும் உரிய காலத்தில் கிடைப்பதில்லை. இந்த வகையிலே தற்போது மருந்துகள் கையிருப்பில் இன்மையால் வெளியிடங்களில் விலை கொடுத்து வாங்குமாறு வைத்தியரால் சிட்டை எழுதிக் கொடுக்கப்படுவதுடன், சில வறிய நோயாளர்களுக்கு அவர் தனது சொந்தச் செலவிலேயே மருந்துகள் பெற்றுக் கொடுப்பதாகவும் தெரியவருகின்றது.

அவசர நோயாளர்களுக்கு மருந்துகள் பெறுவதென்றால் நெடுந்தீவிலே தனியார் மருநதகங்கள் எதுவும் இல்லாத நிலையில் யாழ்ப்பாண நகரத்திலேயே பெறவேண்டும். இதற்கென ஒருநாள் பொழுதைக் கழிக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவதுடன், நோயாளர் உயிராபத்துக்கும் உட்படக்கூடிய நிலைமையும் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளது.

இந்த வகையில் நெடுந்தீவு பிரதேசம் தனிப் பிரதேசமாக்கப்பட்டதுடன், தனிமைப் படுத்தப்பட்டும் விட்டதாகவே எண்ணத்தோன்றுகின்றது. மக்களின் நலனில் அக்கறை கொண்ட அரச திணைக்கள அதிகாரிகளும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கவனத்தில் எடுத்து நெடுந்தீவு மக்களின் அத்தியாவசியத் தேவைகளை உரிய திணைக்களங்கள், சபைகள் என்பவற்றுடன் தொடர்பு கொண்டு தீர்த்துக் கொள்ள ஏற்பாடுகள் செய்யமாட்டார்களா? என்ற ஒரு ஏக்கத்துடனும், ஆதங்கத்துடனும் இருக்கின்றார்.

மக்கள் தங்களுக்கு தேவையான வசதிகளை தங்கள் சக்திமூலம் பெற்றுக்கொள்ள முடியுமென்றால் அரச திணைக்கள அதிகாரிகள் தொடர்பில் என்ன வேலைகள் பொறுப்பிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பாக மக்கள் மத்தியிலே ஒரு விரக்தி நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எப்போது நிலைமை சீராகும்....!

- சீத்தல்

# உங்களால் வானத்தை வாங்கவோ விற்கவோ முடியுமா?

"அமெரிக்காவின் பெருந்தலைவர் எங்களது நிலததை வாங்க விரும்புவதாக அறிகிறோம். அமெரிக்கத் தலைவர் தனது நட்பையும் நல்லெண்ணத்தையும் எங்கள் பால் காட்டுவதாகவும் அறிகிறோம். இது அவரது அன்பையே காட்டுகிறது. ஏனெனில் எங்களது நட்பு அவருக்குத் தேவையற்றது. ஆனாலும் உங்களது வேண்டுகோளை நாங்கள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். அப்படி நாங்கள் ஏற்றுக் கொள்ளாவிடில் துப்பாக்கி சகிதம் வெள்ளையர் இங்கு வந்து எங்களது நிலத்தை அபகரித்துக் கொளவார்கள் என்பது எங்களுக்கு நன்றாகவே தெரியும். இந்தச் செவ்விந்தியத் தலைவன் அமெரிக்கப் பெருந்தலைவரிடம் சொல்லப்போவது, பருவங்கள் உள்ளவரை வானில் நட்சத்திரங்கள் உள்ளது போல் முக்காலமும் உண்மையாகும்

உங்களால் வானத்தை வாங்கவோ விற்கவோ முடியுமா? நிலத்தின் கதகதப்பை வாங்க முடியுமா? நீங்கள் கேட்பது எங்களுக்கு வேடிக்கையாகத்தான் இருக்கிறது. இந்தத் தென்றல் காற்றின் வாசமும், இந்தத் தெளிந்த நீரின் ஒளியும் எங்களுக்குச் சொந்தமானவை அல்ல. இவற்றை எப்படி உங்களால் எங்களிடமிருந்து வாங்கமுடியும்? இது பற்றிக் காலம் தான் சொல்ல வேண்டும். இந்த நிலத்தின் ஒவ்வொரு பகுதியும் எங்களுக்குப் புனிதமானவை. ஒவ்வொரு ஊசி இலையின் பளபளப்பும், கரைகளின் மணலும், அடர்ந்த காடுகளின் பனி மூட்டமும், வண்டுகளின் ரீங்காரமும் எங்களுக்குப் புனிதமானவை. நெஞ்சை விட்டு அகலாதவை.

வெள்ளை மனிதனுக்கு எங்களது வாழ்க்கை நெறி விளங்குவது இல்லை. அவனுக்கு நிலத்தின் ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் தெரிவதில்லை. அவன் இரவில் வரும் திருடனைப் போல் தனக்கு வேண்டியதை எல்லாம் நிலத்திலிருந்து எடுத்துக் கொள்கின்றான். இந்த நிலம் அவனது சகோதரன் அல்ல - எதிரி. அதை அவன் வெற்றிகொண்டு முன்னேறுகிறான். தனது முன்னோர்களின் கல்லறைகளை அவன் வழிநெடுகிலும் அமைத்துக் கொண்டு செல்கிறான். அதைப்பற்றி அவன் கவலைப்படுவதில்லை. நிலத்தைத் தனது குழநதைகளிடம் இருந்தே அவன் அபகரித்துச் செல்கிறான். அவனுக்கு இலட்சியம் இல்லை. அவனது தந்தையின் கல்லறை பற்றியும் குழந்தைகளின பிறப்புரிமை பற்றியும் அவனுக்குச் சிந்தனையே கிடையாது. அவனது பசி இந்த நிலம் அனைத்தையும் விழுங்கி விட்டு வெறும் பாலைவனத்தை மட்டுமே விட்டுச் செல்லப் போகிறது.

உங்களது நகரங்களைப் பார்த்தாலே செவ்விந்தியர்களாகிய எங்களுக்குக் கண்களில் எரிச்சல் உண்டாகிறது. ஒருகால் செவ்விந்தியர்கள் காட்டுமிராண்டிகளாக இருப்பதால் அவாகளுக்குப் புரியவில்லையோ என்னவோ...? வெள்ளையனின் நகரங்களில் அமைதியான இடமே கிடையாது. இலைகள் காற்றில் அசைவதால் ஏற்படும் ஒலியும், வண்டுகள் பறப்பதால் அவற்றின் சிறகுகள் எழுப்பும் ஒலியும் அங்கு கேட்பதில்லை.

நான் ஒரு காட்டுமிராண்டியாக இருப்பதாலோ என்னவோ! நகரங்களின் இரைச்சல் என் காதுகளுக்கு நாராசமாக ஒலிக்கிறது. குயில்களின் கூவுதலையும், தவளைகளின் உரையாடல்களையும் கேட்க முடியாத இடத்தில் என்னதான் இருக்கிறது? தாமரைக் குளத்தின் மீது தவழ்ந்து வந்து முகத்தில் வீசும் தென்றலும், மழைக்குப் பின் மண் வாசனையுடன் வரும் காற்றும், வேப்பம் பூ மணத்துடன் வரும் காற்றும் எங்களுக்கு மிகவும் பிடித்தமானவை. இந்தக் காற்று செவ்விந்தியனுக்கு விலை மதிப்பிட முடியாத பொக்கிஷம். இந்தக் காற்றைத்தான் விலங்குகளும் செடிகொடிகளும், மனிதர்களும் சுவாசிக்கிறார்கள். வெள்ளையன் தான் சுவாசிக்கும் காற்றின் மீது கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. உறுப்புகள் செயல் இழந்து சாகப்போகும் மனிதனைப்போல் இருப்பதால் அவனுக்குக் காற்றின் மணம் தெரிவதில்லை.

உங்களது விருப்பத்தை நான் ஏற்றுக் கொள்ளத் தீர்மானித்தால் அதற்கு ஒரு நிபந்தனை விதிப்பேன். வெள்ளையன் இந்த மண்ணின் விலங்குகளைத் தனது சகோதரர்களாக எண்ணவேண்டும். நான் ஒரு காட்டுமிராண்டி வேறு எந்த மார்க்கமும் எனக்குப் புலப்படவில்லை. ஓடும் ரயிலில் இருந்தபடியே வெள்ளையர்கள் சுட்டுத்தள்ளிய ஆயிரக்கணக்கான எருமைகளின் அழுகிய பிணங்களை நான் புல்வெளிகளில் பார்த்தேன். நாங்கள் உயிர் வாழ்வதற்காக எருமைகளைக் கொல்கிறோம். ஆனால் துப்பாக்கி எந்த விதத்தில் எருமையை விட மேலானது என்று எங்களுக்கு விளங்கவில்லை. விலங்குகள் இல்லாமல் மனிதன் எப்படி வாழ முடியும்? எல்லா விலங்குகளும் கொல்லப்பட்டு விட்டால் அவனது ஆத்மாவின் தனிமையே அவனைக்கொன்றுவிடும். விலங்குக்கு நேர்வது மனிதனுக்கும் நேரும். எல்லாவிடயங்களுமே ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. நிலத்துக்கு நேர்வது நிலத்தின் மைந்தர்களுக்கும் நேரும்.

எங்களது குழந்தைகள் தங்களது தந்தையர்கள் போரில் தோற்கடிக்கப்பட்டதைப் பார்த்திருக்கிறார்கள். எங்களது வீரர்கள் அவமானப் பட்டிருக்கிறார்கள். தோல்விக்குப் பிறகு அவர்கள் சோம்பேறிகளாக மாறி நிலத்தைத் தனது வியர்வை, உணவு, நீர் போன்ற அசுத்தங்கங்களால் மாசுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். எங்களது எஞ்சியுள்ள நாட்களை நாங்கள் எங்கே கழிக்கிறோம் என்பது முக்கியம் அல்ல. சில நாட்களே எஞ்சியுள்ளன. சிலமணி நேரங்கள் - சில குளிர் காலங்களுக்குப் பின்பு, எஙகளது முன்னோர்களின் கல்லறைகளைப் பார்தது்க் கண்ணீர் வடிக்க யாருமே இருக்கமாட்டார்கள். நாங்களும் உங்களைப்போலவே பலம வாய்ந்தவர்களாகவும் நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருந்தவர்கள் தான்.

ஒருவிடயம் எங்களுக்கு நன்றாகவே தெரியும். அதை வெள்ளை மனிதனும் விரைவில் தெரிந்து கொள்வான். நம் இருவரின் கடவுளும் ஒருவரே. இப்போது நீ இந்த நிலத்தை உனக்குச் சொந்தமாக்கி கொண்டது போலக் கடவுளையும் உனக்குச் சொந்தமாக்கிக் கொள்ளலாம் என்று எண்ணுகிறாய். அது உன்னால் முடியாது. ஆண்டவன் எல்லா மனிதர்களுக்கும் பொதுவானவன். இந்தப் பூமி அவனுக்குப் புனிதமானது. இந்தப் பூமிக்குக் கெடுதல் விளைவிப்பது கடவுளையே அவமானப்படுத்துவது போலாகும். வெள்ளையர்களும் சீக்கிரமே அழிந்து போவார்கள் - மற்ற இனத்தவர்க்குச் சற்று முன்பாகவே. உன் படுக்கையை நீ அசுத்தப்படுத்திக்கொண்டே வந்தால் ஒருநாள் உனது அசுத்தத்திலேயே நீ அழிந்து போவாய்.

எல்லா எருமைகளும் கொல்லப்பட்ட பின்பு, எல்லாக் குதிரைகளும் அழிந்த பின்பு காடுகளின் புனிதமான மூலைகளில் மனிதனின் வியர்வை நாற்றமே எஞ்சி இருக்கும். புதர்கள் அழிந்து போகும். கழுகுகள் காணாமல் போய்விடும். சிட்டுக்குருவிகளுக்கும் மைனாக்களுக்கும் விடை கொடுத்து அனுப்புவது எங்கே போய் முடியும்? நமது வாழ்வு முடிந்து சாவு ஆரம்பிப்பதில் தான் முடியும்.

வெள்ளை மனிதன் எந்த மாதிரி கனவு காண்கிறான் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அது தெரிந்தால் எங்களால் வெள்ளையர்களைப் புரிந்துகொள்ள முடியும். தனது குழநதைகளின் மனத்தில் எந்த நம்பிக்கைகளை அவன் வளர்க்கிறான். எந்த மாதிரி வருங்காலம் அவர்களுக்கு அமைய வேண்டும் என்று அவன் நினைக்கிறான் என்பதெல்லாம் எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் நாங்கள் காட்டுமிராண்டிகள், வெள்ளையனின் கனவுகள் பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது. எங்களுக்கு அது தெரியாததால் எங்கள் பாதையில் நாங்கள் போவோம். நமக்குள் உடன்பாடு ஏற்பட்டால் அது நீங்கள் எங்களுக்காக ஒதுக்கியிருக்கும் நிலங்களைப் பெறுவதற்குத்தான். அந்த நிலங்களில் எங்கள் விருப்பம் போல் சிலகாலம் நாங்கள் வாழ்வோம். கடைசிச் செவ்விந்தியன் மறைந்த பின் எங்களது ஆவிகள் இந்தப் புல்வெளிகளில் உலாவி வரும். ஏனெனில் பிறந்த குழந்தை தனது தாயை நேசிப்பது போல் நாங்கள் இந்தப் பூமித்தாயை நேசிக்கிறோம்.

எங்களது நிலத்தை நீங்கள் வாங்கிவிட்டால் அதை எங்களைப்போல் நீங்களும் நேசியுங்கள். எங்களைப் போலவே அதைப் பாதுகாத்து வாருங்கள். நிலத்தை உங்கள் அனைத்துச் சக்தியையும் திரட்டி நினைவில் கொள்ளுங்கள். உங்களது குழந்தைகளுக்காக அதைப் பாதுகாத்து வாருங்கள். கடவுள் நம் அனைவரையும் நேசிப்பதைப்போல நீங்களும் நிலத்தை நேசியுங்கள். எங்களுக்கு நன்றாகவே தெரியும் கடவுள் நமக்குப் பொதுவானவர் என்று. இந்தப் பூமி அவருக்குப் பெருமதிப்பிற்குரிய பொருளாகும். நமக்குப் பொதுவான தலைவிதியிலிருந்து வெள்ளையன் கூடத் தப்ப முடியாது.

**சூழல் பாதுகாப்புப் பகுதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழம்.**

# ஈராக்கில் இடைக்கால அரசு குறித்த இணக்கத்தை நெருங்குகிறது ஐ.நா



ஈராக்கில் ஜூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் இடைக்கால அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்கான இணக்கப்பாட்டிற்கு ஐக்கிய நாடுகள் சபை நெருங்கிவந்துள்ளது.

அமெரிக்காவினாலும், இங்கிலாந்தினாலும் முன்வைக்கப்பட்ட இடைக்கால அரசு தொடர்பான தீர்மானங்களை ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபை ஆராய்ந்துவருகின்றது.

இத்தீர்மானங்களுக்கு அமெரிக்காவும், இங்கிலாந்தும் தம்மாலான இராணுவரீதியான ஒத்துழைப்பை வழங்குவதை உறுதிசெய்துள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபை இத்தீர்மானங்களுக்கு இணங்கியதாகத் தெரிவித்துள்ள ஈராகிற்கான அமெரிக்கத் தூதுவர் ஜோன் நெக்ரோபொனெற் -இத்தீர்மானம் பெரும்பாலும் இன்றையதினம் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையால் நிறைவேற்றப்படுமெனத் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஈராக்கிற்கான அமெரிக்கத் தூதுவர், ஈராக்கிய ஆளுநர் சபைக்கும், அமெரிக்காவிற்கும் இடையே பரிமாறப்பட்ட கடிதங்கள் ஈராக்கினுடைய இறைமை பாதிக்கப்படுகின்றது என்பதை வெளிக்காட்டுவதாகத் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபையின் சிபார்சுக்கும் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானத்துடன் ஈராக்கிய ஆளுநர் சபைக்கும் அமெரிக்காவிற்கும் இடையே பரிமாறப்பட்ட கடிதங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

ஈராக்கில் இடைக்கால அரசினை அமைப்பது தொடர்பான இத்தீர்மானம் எதிர்வரும் ஜூன் 30 ஆம் திகதிக்குப் பின்னர் ஈராக்கில் பன்னாட்டுப் படைகள் எங்கு நிறுத்தப்படும் என்பது தொடர்பாகத் தெளிவாகக் கோடிட்டுக்காட்டுகின்றது.

ஆனாலும் ஈராக்கில் அமெரிக்கப் படைகள் மேற்கொள்ளும் சர்ச்சைக்குரிய நடவடிக்கைகளை தடுக்கும் அதிகாரம் பாக்தாத்திடம் இருக்குமா என்கின்ற வினா இத்தீர்மானம் தொடர்பாக எழுந்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பிரான்ஸுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் தூதுவர் - ஜீமார்க் டீலா சப்லிய இவை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமையால் இறுதித்தீர்வுக்கு உள்ளடக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இத்தீர்மானம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த புதிய ஈராக்கியப் பிரதமர் இயாட் அல்லவி - ஈராக் தனது பாதுகாப்பினை தானே வழங்கும் வரையில் வெளிநாட்டுத் துருப்புக்கள் ஈராக்கில் நிலைகொண்டிருக்கும் எனத் தெரிவித்தார்.

# பாகிஸ்தானில் பஸ் விபத்து 38 யாத்திரிகர்கள் மரணம்!

பாகிஸ்தானில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பஸ் விபத்தில் குறைநதது 38 யாத்திரிகர்கள் கொல்லப்பட்டதுடன் எட்டுப்பேர் படுகாயமடைந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் சென்றுகொண்டிருந்த பஸ் தவறி, மலையடிவாரத் தண்ணீர்ப் பகுதியில் விழுந்ததனாலேயே இவ் விபத்து இடம்பெற்றது.

முஸ்லிம் பள்ளிவாசல் ஒன்றில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டபின் திரும்பி வந்துகொண்டிருந்த யாத்திரிகர்களே இந்த பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களாவர்.

வளைவு ஒன்றில் திரும்பும்போது சாரதி வேகக்கட்டுப்பாட்டை இழந்தமையினாலேயே இவ்விபத்து இடம்பெற்றதாக பாகிஸ்தான் பொலிஸார் தெரிவித்தனர்.

படையினரும், பொலிஸாரும் மலையடிவாரப் பகுதியில் இறந்தவர்களின் உடல்களை மீட்கும் பணியில் இரவு, பகலாக ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்தவர்களில் 12 பெண்களும் ஒரு குழந்தையும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.




# இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் மூன்று பலஸ்தீனர்கள் உயிரிழப்பு



(டெல்அவிவ்)

இஸ்ரேலியப் படையினரின் வெவ்வேறான தாக்குதல் சம்பவங்களில் மூன்று பலஸ்தீனர்கள் காஸாப் பகுதியில் கொல்லப்பட்டனர்.

காஸாப் பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமானவர்கள் மீது நடத்திய தாக்குதலில் 17 வயதுடைய கான் யுனுஸ் என்ற சிறுவன் கொல்லப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது.

மற்றொரு சம்பவத்தில் மேற்குக்கரைப்பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காக இஸ்ரேலியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் சக்கரநாற்காலியிலிருந்த ஒருவர் கொல்லப்பட்டார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் விமானநிலையமருகிலிருந்து கற்களினால படையினர் மீது எறிந்தவேளை அதனைக் கலைப்பதற்காகவே துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இஸ்ரேல் எல்லைப்பகுதியருகில் மனநலம் குன்றிய பலஸ்தீன இளைஞர் ஒருவர் இஸ்ரேலியப் படையினரால் நேற்றுக்கொல்லப்பட்டதாக பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை மேற்குக்கரைப்பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது ஏழு பொதுமக்களை இஸ்ரேல் இராணுவம் கைதுசெய்துள்ளதாக பலஸ்தீன வானொலி தெரிவித்தது.

# கொசோவாவில் துப்பாக்கிச்சூடு சேர்பிய இன சிறுவன் உயிரிழப்பு!



கொசோவா நாட்டிலுள்ள பிறிஸ்ரினா நகரில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சேர்பிய இனத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டான்.

இந்தச் சூட்டுச் சம்பவத்தையடுத்து சேர்பிய - அல்பேனிய இனங்களுக்கிடையே வன்செயல்கள் வெடிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கொசோவா பொலிஸார் ஆயுதம் தாங்கிய இரண்டு அல்பேனியர்களை இந்தச் சம்பவம் நடைபெற்றபின்னர் கைதுசெய்துள்ளனர்.

16 வயது நிரம்பிய சேர்பிய சிறுவனே பிறிஸ்ரினா நகரில் அமைந்துள்ள உணவு விடுதியொன்றின் முனனால் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்த கொசோவா பொலிஸார் அங்கு காவலரண்களை நிறுவி வீதிகளைத் தடைசெய்து கலவரம் வெடிக்காதவகையில் பாதுகாப்பினைப் பலப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் கொசோவாவிலுள்ள நேட்டோ தலைமையிலான சமாதானப் படையினருடன் இணைந்து கொசோவாப் பொலிஸார் ரோந்து நடவடிக்கைகளையும் அதிகரித்துள்ளனர்.

கொசோவாவிலுள்ள பிரதான அல்பேனிய அரசியல்வாதிகள் சேர்பிய இன சிறுவன் கொல்லப்பட்டதனை வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

கொசோவா பிரதமரும் இந்தச் சம்பவததையிட்டு மக்களை அமைதியாக இருக்குமாறும், சம்பவத்துடன் தொடர்புடைய சூத்திரதாரிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவர் எனவும் தெரிவித்தார்.

கொசோவாவில் அல்பேனிய, சேர்பிய இனங்களுக்கிடையில் ஏற்கனவே பதட்டமான சூழ்நிலை உள்ள நிலையில், சேர்பிய சிறுவன் கொல்லப்பட்டமை மேலும் பதட்டத்தை அதிகரிக்குமென பி.பி.ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

# பி.பி.ஸி.செய்தியாளர் மீது சவுதி தலைநகரில் தாக்குதல்

## ஒருவர் பலி மற்றொருவர் படுகாயம்

பி.பி.ஸி. செய்தி நிறுவனத்தின் செய்தியாளர்கள் இருவர் மீது, சவுதியின் தலைநகர் றியாட்டில் நடத்தப்பட்ட தாக்குதலில் அந்த செய்தி நிறுவன படப்பிடிப்பாளர் கொல்லப்பட்டதுடன், மற்றுமொரு செய்தியாளர் கடுங்காயங்களுக்குள்ளாகி கவலைக்கிடமான நிலையில் உள்ளார்.

கிறிஸ்மன் கம்பர்ஸ் (வயது 36) என்ற படப்பிடிப்பாளரே கொல்லப்பட்டதுடன், செய்தியாளரான, பிறாங் காட்னர் (வயது 42) படுகாயங்களுக்குள்ளாகி கவலைக்கிடமான நிலையில் உள்ளார் என பி.பி.ஸி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பகல் இனந்தெரியாதவர்களால் அந்த இருவரும் சுடப்பட்டதாக றியாட் பொலிஸ் தலைமையதிகாரி தெரிவித்தார்.

கடந்தவாரம் சவுதியின் கோபார் பகுதியில் பணயக்கைதிகளைப் பிடித்து வைத்திருந்த சம்பவம் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காகவே இந்த இருவரும் கடந்தவாரம் சவூதிக்குச் சென்றதாக பி.பி.ஸி தெரிவித்தது.

சவுதிக்கான பிரிட்டன் தூதுவர் கோபெர் - கோலெஸ் தெரிவிக்கையில் - பிராங் காட்னரின் நிலை கவலைக்கிடமாகவே இருப்பதாகக் குறிப்பிட்டார். அத்துடன் இவர் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டதாகவும் இடைவிடாத கண்காணிப்பில் இவரை மருத்துவர்கள் வைத்துள்ளதாகவும், பிரிட்டன் தூதுவர் நேற்றுக்காலை தெரிவித்தார்.

காட்னர் மீது பலதடவைகள்துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதனாலேயே அவர் கவலைககிடமாக இருப்பதாக பி.பி.ஸியின் செய்திப்பணிப்பாளர் றிச்சர்ட் சாம்றொக் தெரிவித்தார்.



பிறாங் காட்னர்



கிறிஸ்மன் கம்பர்ஸ்

சவுதிக்கான பிரிட்டன் தூதுவர் தற்போது வைத்தியசாலையிலேயே உள்ளதாக பிரிட்டன் வெளிநாட்டுப் பெண பேச்சாளர் தெரிவித்தார்.

பிரிட்டனுக்கான சவுதித் தூதுவர் இரண்டு செய்தியாளர்களதும், குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த கவலையினைத் தெரிவித்தார். அத்துடன் பிராங் காட்னரை தனக்குத் தனிப்பட்டமுறையில் தெரியும் எனவும், சவுதி மக்கள் செய்தியாளருக்கு உயர்ந்தபட்ச மரியாதையைச் செலுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதலை நடத்தியவர்கள் தப்பிவிட்டதாகவும், தற்போது வீதிகள் தடைசெய்யப்பட்டு சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சவுதிப் படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை - அத்தியாவசிய தேவைகள் தவிர்ந்த வேறு காரணங்களுக்காக எவரையும் சவுதிக்குச் செல்ல வேண்டாம் எனவும், பயங்கரவாதிகள் மேலும் பல தாக்குதல்களை எதிர்காலத்தில் நடத்தக்கூடும் எனவும், பிரிட்டன் வெளிநாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். சுடப்பட்டு கவலைக்கிடமான நிலையில் உள்ள காட்னர் பி.பி.ஸி செய்திச் சேவையில் பாதுகாப்பு செய்தியாளராக கடந்த இரண்டு வருடங்களாக பணிபுரிந்து வந்திருக்கின்றார்.

## அமெரிக்கப் படைகளை

# தென்கொரியாவிலிந்து விலக்கல் குறித்து இருநாட்டு அதிகாரிகளும் கலந்துரையாடல்

தென்கொரியாவிலுள்ள அமெரிக்கப் படையினரை குறைப்பது தொடர்பாக அமெரிக்க அதிகாரிகளுக்கும், தென்கொரிய அதிகாரிகளுக்குமிடையே தென்கொரிய தலைநகர் சியோலில் பேச்சுக்கள் இடம்பெற்றுள்ளன.

தென்கொரியாவிலுள்ள 37,000 அமெரிக்கத் துருப்பினரில் மூன்றிலொரு பகுதி படையினரை குறைக்கத் திட்டமிட்டுள்ளதாக வொஷிங்ரன் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தென்கொரியாவின் பாதுகாப்பு வடகொரியாவால் இன்னமும் அச்சுறுத்தப்பட்டுக்கொண்டே இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆனாலும் இந்தப் படைகள் விலககல் என்பது இரு கொரியாக்களுக்குமிடையே ஒரு சமரசத்தை ஏற்படுத்துமென தென்கொரிய பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

கடந்த பத்தாண்டுகளில் ஆண்டுதோறும் சராசரியாக 600, 000 பீப்பாய்கள் எண்ணெய் கப்பல் விபத்துக்களின் மூலம் கடலில் சேர்ந்துள்ளது. இது 2002 ஆம் ஆண்டில் 'பிறிஸ்ரிஜ்' எண்ணெய் தாங்கிக் கப்பல் மூழ்கியதால் கடலில் கலந்த எண்ணெயின் அளவைப்போலப் 12 மடங்குகள் ஆகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இடைக்கால நிர்வாக யோசனைகள் நாடாளுமன்றில் விவாதிக்கப்படும்!

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபை வழங்குவது குறித்து இன்றும் நாளையும் நடைபெறும் நாடாளுமன்ற அமர்வுகளில் ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் நடாத்துவதற்கு நேற்று நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து நாடாளுமன்றில் ஒத்திவைபபு பிரேரணை மீதான விவாதம் நாடாத்தப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பிரஸ்தாபித்திருந்தது.

இந்த கோரிக்கைகள் குறித்து நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற குழுத்தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. (01)

## வவுனியா சிறுமி படுகொலை

# அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டனர்

(வவுனியா)

வவுனியா தாலிக்குளம் பகுதியில் 15 வயது வாய்பேச முடியாத சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொலை செய்த சந்தேக நபர் வவுனியா நீதிமன்றில் நேற்றுமாலை நடைபெற்ற அடையாள அணிவகுப்பின்போது சிறுமியின் உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டார்.

வவுனியா மாவட்ட நீதிபதி எம். இளஞ்செழியன் முன்னிலையில் நடைபெற்ற இந்த அடையாள அணிவகுப்பின்போது - சந்தேக நபரை - சிறுமியின் தாய், தந்தை மற்றும் தாலிக்குளப் பகுதி வயோதிபப் பெண் என மூவர் அடையாளம் காட்டினர்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபரின் விளக்கமறியலை நீதிவான் நீடித்துள்ளார்.

கடந்த மூன்றாம் திகதி வவுனியா தாலிக்குளம் பகுதியில் ஆடுமேய்க்கச் சென்ற வாய்பேச முடியாத 15 வயதுச் சிறுமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டமை தெரிந்ததே. (03)

# வட-கிழக்கு ஆசிரிய வெற்றிடங்களுக்கு ஓய்வுபெற்றவர்களை நியமிக்க முடிவு!

## மாகாண ஆளுனர் சம்மதம் தெரிவிப்பு

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் தமிழ்மொழிமூல பாடசாலைகளில் நிலவும், ஆசிரியர் பற்றாக்குறையை தீர்க்கும் ஒரு நடவடிக்கையாக - ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வுபெற்ற தமிழ் மொழி மூல ஆசிரியர்களை வெற்றிடங்கள் அதிகமுள்ள எட்டு மாவட்டங்களிலும் ஒப்பந்த அடிப்படையில் மீள நியமனம் செய்வதற்கு மகாண ஆளுனர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தன சம்மதம் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஆசிரியர் வெற்றிடம் மொத்த ஆளணியில் 30 வீதத்திற்கும் அதிகமாக உள்ள பாடசாலைகளில் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற தமிழ் மொழிமூல ஆசிரியர்களை நியமித்து வடக்கு - கிழக்கில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை கணிசமாகக் குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் திருகோணமலையில் உள்ள ஆளுநர் பணிமனையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடனான கலந்துரையாடலின் போது மாகாண ஆளுநரால் இந்த சம்மதம் தம்மிடம் தெரிவிக்கப்பட்டதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கருத்துத் தெரிவித்தார்.

வெற்றிடமாக உள்ள ஆசிரியர் பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் மீள நியமனம் செய்யப்படும்.

ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்கு அவர்கள் தற்போது பெற்றுவரும், மாதாந்த ஓய்வூதியத்துக்கு மேலதிகமாக அவர்கள் ஓய்வு பெறுவதற்கு முன்னர் இறுதியாகப் பெற்ற மாதாந்த வேதனம், புதிய ஒப்பந்த ஆசிரிய கடமைக்காக வழங்கப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எட்டு மாவட்டங்களிலும் பாரிய ஆசிரியப் பற்றாக்குறை நிலவுகின்ற போதும், சிறப்பாக இராணுக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களான வன்னி, மூதூர் கிழக்கு மற்றும் ஈச்சிலம்பற்று, மட்டுநகரின் படுவான்கரைப் பகுதிகளில் மிக் அதிகளவில் தமிழ் மொழிமூல ஆசிரியப் பற்றாக்குறை காணப்படுகின்றது.

எனவே - புதிதாக நியமிக்கப்பட உள்ள ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர்கள் மூலம் இப்பிரச்சினை கணிசமாக தீரும் என்றும் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நியமனம் வழங்கப்படவுள்ள ஒப்பந்த ஆசிரியர் சேவையில் இணைந்துகொள்ள விரும்பும் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் தமது விண்ணப்பங்களை தாம் சேவை புரிய விரும்பும் பாடசாலை அமைந்துள்ள வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் என த.மகாசிவம் மேலும் கூறியுள்ளார். (10)

## மல்வத்தை பீடாதிபதி காலமானார்

இலங்கையின் சக்தி வாய்ந்த பௌத்த பீடங்களின் ஒன்றான மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் ரம்பக்வெல விபசி தேரர் தனது 89 ஆவது வயதில் நேற்றுக்காலமானார்.

1989 ஆம் ஆண்டு மல்வத்த பீடத்தில் பீடாதிபதியாக விபசி தேரர் நேற்று மாலை 3.15 மணியளவில் கண்டி மருத்துவமனையில் காலமானார்.

# பாடசாலைகளில் நிதி வசூல்; கல்வி அமைச்சு தடைவிதிப்பு

(கொழும்பு)

அரசாங்கப் பாடசாலைகளில் மாணவர்களிடம் இருந்து வசதிக் கட்டணம் சேவைக்கட்டணம் ஆகியவற்றைத் தவிர்ந்த வேறெந்தக் கட்டணங்களையும் அறவிடுவதைத் தடுப்பதற்கு கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

பாடசாலை அபிவிருத்தி நிதி சங்க உறுப்புரிமைக்கட்டணம், உயர்தர வகுப்பு நிதி எனப் பாடசாலைகளில் பல்வேறு வழிகளிலும் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

இது தொடர்பான பெருமளவு முறைப்பாடுகள் கல்வியமைச்சுக்குக் கிடைத்துள்ளன.

இவ்வாறு பல்வேறு கட்டணங்கள் அறவிடப்படுவதால் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் சிரமங்கள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டிய கல்வியமைச்சு வட்டாரங்கள், வசதிகள் மற்றும் சேவைக்கட்டணங்கள் தவிர்ந்த ஏனைய கட்டணங்கள் அறவிடப்படுவதை நிறுத்துமாறு கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளதாக்வும் தெரிவித்தன.

# 2 ஆயிரத்து 977 பட்டதாரிகள் வேலைவாய்ப்புக்கு விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வேலையற்ற பட்டதாரிகள் ஆட்சேர்ப்புக்காக இரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்து 77 பேர் விண்ணப்பித்துள்ளதாக யாழ். செயலகத்தின் உதவி அரசாங்க அதிபர் வீரபத்திரபிள்ளை தெரிவித்தார்.

புதிய அரசாங்கத்தினால் இலங்கை முழுவதிலும் உள்ள பட்டதாரிகளை பொருத்தமான அரச துறைகளில் ஆட்சேர்த்தல் தொடர்பாக பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இதற்கமைவாக யாழ்மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களினூடாகவும் விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இதனடிப்படையில் யாழ்.மாவட்டத்தில் இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து 77 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இவர்களில் மீண்பிடியியல். உடற்கல்வி டிப்ளோமாதாரிகள், வெளிநாடுகளில் பட்டம்பெற்றோர், உயர் தொழில்நுட்பபட்டச்சான்றிதழ் பெற்றோரும் அடங்குகின்றனர். இதனை விட அரச மற்றும் தனியார் துறைகளில் நிரந்தரப் பணிபுரிவோரும் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பட்டதாரிகளின் எண்ணிக்கையிலும் அதிகமான வேலை வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் தென்பகுதியில் பட்டதாரிகளின் எண்ணிக்கையிலும்பார்க்க வேலைவய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுவதாகவும் வடக்கு கிழக்கு மாகாண சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலகங்களினூடாக விண்ணப்பங்களை அனுப்பியுள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கையின்படி நல்லூர் பிரதேச செயலர்பிரிவில் 474 பட்தாரிகளும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 351 பட்டதாரிகளும் கரவெட்டியில் 327 பட்டதாரிகளும் விண்ணப்பங்களை அனுப்பியுள்ளனர்.

ஏனைய பிரதேசசெயலர் பிரிவுகள் குறைந்தளவான விண்ணப்பதாரிகளையே கொண்டுள்ளன.

அவற்றில் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் ஒரேயொரு பட்டதாரியே வேலைவாய்ப்பிற்காக விண்ணப்பத்தினை அனுப்பியுள்ளார்.

இதே போல் ஊர்காவற்துறைப் பிரதேச செயலகத்தில் 15 பேரும் விண்ணப்பித்துள்ளனர். இவை இரண்டுமே மிகக் குறைந்த பட்டதாரிகள் பதிவு செய்யப்பட்டுள்ள பிரதேச செயலகங்களாகும். (ப)

### அரசாங்கத்தின்...

பந்தம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடரும் என அறிவித்தார். எனினும் ஜனாதிபதியின் உறுதிப்பாடற்ற தன்மையினால் பேச்சுவார்த்தை மேசைக்கு அவரால் வரமுடியவில்லை. விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையைத் தொடங்கி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையைக் கையளிக்க அரசு தவறிவிட்டது. தற்போது ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசு அசமந்தப் போக்கைக் கைவிட்டு எமது மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்றி வைக்க வேண்டும் என இவ்வறிக்கை மூலம் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### இலங்கை...

படுத்துவதற்கு இந்தியா முன்னுரிமை வழங்கும்.

சகல பிராந்திய, சர்வதேச விகாரங்கள் தொடர்பாகவும் சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையை இந்தியா கடைப்பிடிக்கும் என்றும் அப்துல்கலாம் மேலும் தெரிவித்தார்.

## நாளை கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஊடகவியலாளர் ஜி.நடேசனின் படுகொலையைக் கண்டித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக நாளை கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளது.

சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆகிய இதற்கான அழைப்பை விடுத்துள்ளன.

நாளை பிற்பகல் 12.30 மணி முதல் 1.30 மணிவரை இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுகாதார ஊழியர்களை

# வேலைநிறுத்தத்தில் ஈடுபடுமாறு சுகாதாரபரிசோதகர்கள் அழைப்பு

(கொழும்பு)

வட - கிழக்கின் சுகாதார ஊழியர்களால் - நாளையும், நாளை மறுதினமும் சுகாதார ஊழியர்கள் தொழிற்சங்கம் நடாத்தவுள்ள வேலைப் பகிஷ்கரிப்பில் யாழ்.மாவட்ட சுகாதார ஊழியர்களையும் பங்குகொள்ளுமாறு ஸ்ரீலங்கா பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் யாழ். கிளை அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது -

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு சுகாதார சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிற்கு இந்த வருடம் முதல் அமுல்படுத்திய புதிய சம்பள அதிகரிப்பை இதுவரை வழங்காததை கண்டித்து சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பு மேற்படி சம்பள அதிகரிப்பை பெறாத சகல உத்தியோகத்தர்களையும் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் வேலை பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபடுமாறு அறிவித்துள்ளது.

இதற்கு அமைவாக யாழ்.மாவட்டத்தில் கடமை புரியும் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களில் மேற்படி சம்பள அதிகரிப்பைப் பெறாத பதிவு வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்கள், வைத்தியசாலைச் சிற்றூழியர்கள், மற்றும் மருந்தாளர்கள், சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும் நாளை முதல் வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுவதுடன் காலை 9.00 மணிக்கு பிரதி மகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு முன்னால் கூடுமாறும் சிறிலங்கா பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் அறிவித்துள்ளது.

### நிரந்தர சமாதா...

இராணுவத்தைச் சேர்ந்தோரும் பொலிஸாரும் நாட்டின் பாதுகாப்புக்கு ஒத்துழைத்துள்ளார்கள்.

இவர்களின் தியாகத்தை அர்த்தமுடையதாக்கும் வண்ணம் அனைத்து இன மக்களின் உரிமைகளைப பேணிப்பாதுகாக்கக் கூடிய ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்புவதற்கு அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டிருக்கின்றது என்றும் குறிப்பிட்டார்.

### எதிர்க்கட்சித்...

புலிகளுடன் பேச்சு நடத்துவது எனற தமது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் வலியுறுத்தியுள்ளதாக தெரியவருகின்றது. (01)

### முரளியை...

வட்டவடிவ முத்திரை வெளியிடப்படுவது இதுவே முதல் தடவையென்பது குறிப்பிடத்தக்கது.

முரளிதரனைக் கௌரவித்து வெளியிடப்படவுள்ள முத்திரையின் பெறுமதி மற்றும் எப்போது வெளியிடப்படும் என்பன போன்ற விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்று இளைஞர் விவகார விளையாட்டுத் துறை அமைச்சு அறிவித்துள்ளது.

பதிப்புலக வேந்தர்களே!
நீண்டநாள் உங்கள் எதிர்பார்ப்பினை 120 நிமிடங்களில் நாங்கள் எமது மண்ணில் நிறைவேற்றுகின்றோம்
நிலா பதிப்பகம்

PCC COLOUR DIGITAL PRINTER
சகல விதமான அளவுகளிலும் கலர் பிரித்தல் செய்து கொடுக்கப்படும் (COLOUR SEPARATION)
சேவையினை அதிவேகமான முறையில் மிககுறைந்த செலவில் செய்து வழங்குகின்றோம்.
- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை (4x8 SIZE PCC COLOUR DIGITAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை 4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல் (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE

பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 08.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.